116

TAM

EUROPEAN SC

BOOK III

OFFICE OF THE ...
4- JAN 193
MADRAS

KERSLAKE

AND

NARAYANASWAMI AIYAR

CHRISTIAN LITERA OCIETY FOR INDIA

S A COLOMBO

விலை, 9 அணா.

TB
0316(8)
N32
175840

Tamil Course for European Schools

BOOK III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4- JAN 1933
MADRAS

BY

REV. PERCY C. KERSLAKE, B. A.

Headmaster, Doveton-Corrie High School, Madras

AND

C. R. NARAYANASWAMI AIYAR, B.A.

Tamil Master, Doveton-Corrie High School, Madras

116

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD COLOMBO

1932

600 008
175 840

DIOCESAN PRESS, MADRAS—1932. B 5336

TB
031,6 (8)
N32

CONTENTS

Lesson		Page
1.	Rules of Combination I	1
2.	Formation of Cases...	4
3.	Formation of Tenses	7
4.	Present Tense Singular	10
5.	Present Tense Plural	13
6.	Revision. Past and Present Tenses	16
7.	Adjectives (ஆன, உள்ள)	18
8.	Composite nouns	20
9.	Prepositional Affixes. மேல், ஒடு, கிட்ட	22
10.	Revision Exercise	26
11.	Cases : motion from and to	27
12.	Cases concluded	30
13.	Personal Pronouns Singular	33
14.	,, ,, Plural	36
15.	,, ,, Neuter, Singular and Plural	38
16.	Imperative Mood and Honorifics	40
17.	Future Tense	43
18.	Future Tense. 3rd Person Neuter, Singular and Plural	47
19.	Revision—Three tenses	49
20.	Numerals, 1-19	50
21.	Rules of Combination II	53
22.	Prepositional Affixes முன், பின், கீழ்	55
23.	Numerals, Tens and Hundreds	57
24.	The Verbal Participle	59
25.	The Infinitive	62

Lesson		Page
26.	Rules of Combination III	65
27.	Universality	67
28.	Relative Participle	69
29.	Past "	72
30.	Future "	74
31.	Adverbs, Rules of Combination IV	76
32.	Temporal Clauses. போது, பின் and முன் with relative participle	78
33.	Numerals, Tens and Units	82
34.	Prepositional Affixes போல, தவிர, சூழ, சுற்றி ...	84

Lesson I.

Rules of Combination I

Rule I. When a word of one syllable of which the vowel is short ends in a mute consonant, that consonant is doubled when followed by a word or an ending beginning with a vowel.

So, கல் a stone becomes கல்லில், கல்லால் etc. Similarly பல் a tooth, கண் eye, பெண் woman.

Rule II. When other words ending in a mute consonant are followed by a word or an ending beginning with a vowel, that mute consonant combines with the initial vowel of the word which follows it.

This we have learned in general in declining words: மனிதன் + ஐ = மனிதனை
மனிதன் + ஆல் = மனிதனால்.

Rule III. As a general rule, all words ending in உ when followed by a word or an ending beginning with a vowel drop the final உ.

We have seen this in the declensions.

காது + இல் = காதில்; காது + ஆல் = காதால் etc.

Note. பசு a cow, is a common exception to this. This word inserts வ் before the vowel e.g. பசுவால் etc.

Similar words are மடு a ditch, மது honey.

Rule IV. With the exception of words ending in உ, when a word ending in a vowel is followed by a word or an ending beginning with a vowel

(*a*) After இ, ஈ or ஐ, the consonant ய் is inserted.

e.g. நரி becomes நரியை, நரியில் etc.

ஈ ,, ஈயை, ஈயில் etc.

மேசை ,, மேசையை, மேசையில் etc.

(*b*) After any other vowel the consonant வ் is inserted.

இராஜா becomes இராஜாவை, இராஜாவால் etc.

பூ ,, பூவை, பூவில் etc.

Exercise I A.

Translate into English :

1. அந்தப் பெரிய கல்லைப் பார்த்தாயா? அது எங்கே இருக்கிறது?
2. என் தகப்பன் அந்தக் கல்லைக் காலையில் உன் தோட்டத்தில் பார்த்தான்.
3. உன் பசுவுக்குப் புல்லைக் கொடுத்தாயா?
4. எத்தனை பெண்கள் கோவிலுக்குப் போனார்கள். ஒரு பெண்ணை நான் பார்த்தேன்.
5. என் பூனை உன் படுக்கையில் இருந்தது.
6. உன் நாக்கை எனக்குக் காட்டு.
7. ஒரு சிறிய பூவை அந்தப் பெண்ணுக்குக் கொடு.

Translate into Tamil:

1. Show your mother your new tooth.
2. Did you see his eye?
3. He looked at me with one eye?
4. Give water to that woman's cow.
5. Did the dog bite the cat with that large tooth?
6. I saw a blue flower in the grass.
7. We opened the door of his room.

Lesson II.

Declension of Nouns

The forms for various cases were learned in Book II. These forms represent a *case ending* added to an *inflectional base*.

Thus:	Infl. Base	Case ending
மனிதனை	= மனிதன் +	ஐ.
பையனால்	= பையன் +	ஆல்
காதில்	= காது +	இல்.
மரத்துக்கு	= மரத்து +	உக்கு.

I. In most nouns the inflectional base is the same as the nominative. e.g:

		Infl. Base	Case ending.
Nom.	கால்	கால்	
Acc.	காலை	கால் +	ஐ
Inst.	காலால்	கால் +	ஆல்
Dat.	காலுக்கு	கால் +	உக்கு
Gen.	காலுடைய	கால் +	உடைய
Loc.	காலில்	கால் +	இல்.

II. Nouns ending in ம் have an inflectional base ending in த்து.

Noun.	Infl. Base.	Inflected cases.
மரம்	மரத்து	மரத்தை, மரத்தால் etc.
பழம்	பழத்து	பழத்தை, பழத்தால் etc.
வாரம்	வாரத்து	வாரத்தை, வாரத்தால் etc.

N.B. The final உ of the inflectional base is dropped when a vowel follows. (See Rule 3. Lesson I.)

III. In most nouns ending in உ, ஆ, இ, ஈ the inflectional base is the same as the nominative, but the ordinary rules of combination bring the usual changes.

	Nom.	Infl. Base.	Inflected cases.
So	காது	காது	காதை etc. (Rule 3)
	பிதா	பிதா	பிதாவை etc. (Rule 4 *b*)
	ஸ்திரீ	ஸ்திரீ	ஸ்திரீயை etc. (Rule 4 *a*)

IV. Another class of nouns generally ending in டு or று double the consonant of the final syllable to form the inflectional base.

	Nom.	Infl. Base.	Inflected cases.
e.g.	வீடு house	வீட்டு	வீட்டை acc. வீட்டால் instr. etc.
	ஆறு river	ஆற்று	ஆற்றை acc. ஆற்றால் instr. etc.

The full declension is as follows :

	Singular.	Plural.	Singular.	Plural.
Nom.	வீடு	வீடுகள்	ஆறு	ஆறுகள்
Acc.	வீட்டை	வீடுகளை	ஆற்றை	ஆறுகளை
Inst.	வீட்டால்	வீடுகளால்	ஆற்றால்	ஆறுகளால்
Dat.	வீட்டுக்கு	வீடுகளுக்கு	ஆற்றுக்கு	ஆறுகளுக்கு
Gen.	வீட்டின்	வீடுகளின்	ஆற்றின்	ஆறுகளின்
Loc.	வீட்டில்	வீடுகளில்	ஆற்றில்	ஆறுகளில்

Exercise II A.

Decline in full, the singular and plural of வயிறு stomach, காடு forest.

Exercise II B.

காடு forest, jungle	வயிறு the stomach
ஆடு a goat	கிணறு a well
மாடு an ox	ஆறு a river
வீடு a house	கட to cross (a river)
சிங்கம் a lion	மான் a stag
புலி a tiger	கரடி a bear

உண்டு there is or there are

Translate into English:

1. அந்தப் பெரிய காட்டில் அநேக சிங்கங்கள் உண்டு.
2. என் வீட்டில் பல அறைகள் உண்டு.
3. இந்த ஆற்றில் அநேக மீன்கள் உண்டு.
4. உன்னுடைய ஆட்டுக்கு இந்தப் பழத்தைக் கொடு.
5. பையன் மாட்டுக்குத் தண்ணீரைக் கொடுத்தான்.
6. நேற்று உன் சகோதரன் என் வீட்டுக்கு வந்தான்.
7. அந்த ஆற்றைக் கடந்தாயா?

Exercise II C.

Translate into Tamil:

1. There are many goats in your father's field.
2. I saw a large ox in your garden.
3. The carpenter's brother came to my house yesterday.
4. There are tigers in that jungle.
5. Yesterday I saw a large stag.
6. My father crossed the river in the morning.
7. We gave grass to your goat.
8. Have you seen my new well?
9. The hunter caught three bears in that forest.
10. Did your mother come to this house?

Lesson III.

Formation of tenses

We learned in Book II the forms for the past tense. Some verbs e.g. பார், கொடு, formed the past tense by adding–த்தேன் –த்தாய் etc.

Others like இரு, நட formed it by adding-ந்தேன், –ந்தாய் etc.

One verb செய் by adding தேன், தாய் etc.

There are three parts to a verb form.

1. The root
2. The medial
3. The ending

The root generally has the same form as the imperative singular. e. g.

	Root	+ Medial	+ Ending
பார்த்தேன் =	பார்	+ த்த்	+ ஏன்
இருந்தோம் =	இரு	+ ந்த்	+ ஓம்
தூங்கினன் =	தூங்கு	+ இன்	+ ஆன்
செய்தாய் =	செய்	+ த்	+ ஆய்.

The medials therefore of the past tense are :—

த், த்த், ந்த் or இன்.

Like தாங்கு are conjugated

எழுது write e.g. எழுதினான் he wrote
ஓடு run e.g. ஓடினான் he ran
and போ go e.g. போனான் he went

[The இ in the medial has been lost]

The following is an analysis of a complete tense.

	Root	+ Medial	+ Ending
படித்தேன்	= படி	+ த்த்	+ ஏன்
போனாய்	= போ	+ இன்	+ ஆய்
இருந்தான்	= இரு	+ ந்த்	+ ஆன்
வாசித்தாள்	= வாசி	+ த்த்	+ ஆள்
கொடுத்தது	= கொடு	+ த்த்	+ அது
தாங்கினோம்	= தாங்கு	+ இன்	+ ஓம்
நடந்தீர்கள்	= நட	+ ந்த்	+ ஈர்கள்
பார்த்தார்கள்	= பார்	+ த்த்	+ ஆர்கள்
கடித்தன	= கடி	+ த்த்	+ அன

Exercise III A.

Analyse in this way the following:

குடித்தேன், திறந்தாய், போனது, படித்தான், கொடுத்தான், நடந்தான், தூங்கினீர்கள், செய்தார்கள், இருந்தோம்.

Exercise III B.

கடிதம் a letter   கன்று a calf   வேகமாய் quickly

Translate into English:

1. பையன் தாயுக்குப் பாலைக் கொடுத்தான்.
2. என் மகள் எனக்குக் கடிதம் எழுதினாள்.
3. நான் வீட்டுக்கு நடந்தேன்.
4. நீ அந்தக் கதவை இந்தச் சாவியால் திறந்தாய்.
5. வண்ணான் ஊருக்கு ஓடினான்.
6. என் சகோதரி கடைக்கு நடந்தாள்.
7. உன் மாடு என் தோட்டத்துக்குப் போனது.
8. நீங்கள் என் அறையில் தூங்கினீர்கள்.
9. பசுக்கள் கன்றுகளுக்குப் பால் கொடுத்தன.
10. தச்சர்கள் அந்த மேசைகளைச் செய்தார்கள்.

Exercise III C.

Translate into Tamil:

1. I wrote a letter to my mother yesterday.
2. Did you sleep well on my bed?
3. The horses ran quickly.
4. Did you all go to my father's shop?
5. The boys ran home.
6. How many goats crossed the river?
7. Where did the tiger sleep?
8. Did your sister write to you?
9. Those birds slept on that large tree.
10. The stags went to the river for water.

Lesson IV.

The Present Tense Singular

The medial for the past tense as we have learned is த், த்த், ந்த், or இன்.

The medial for the present tense is either க்கிற் or கிற்

So the present tense singular of பார் is

Root + Medial + Ending

பார் + க்கிற்	+ என்		பார்க்கிறேன்
	+ ஆய்		பார்க்கிறாய்
	+ ஆன்	=	பார்க்கிறான்
	+ ஆள்		பார்க்கிறாள்
	+ அது		பார்க்கிறது

Similarly the present tense singular of செய் is

செய் + கிற் +	என்		செய்கிறேன்
	ஆய்		செய்கிறாய்
	ஆன்	=	செய்கிறான்
	ஆள்		செய்கிறாள்
	அது		செய்கிறது

Conjugate like பார் the following:

இரு, கொடு, வை, அடி, பிடி, திற, நேசி, வாசி, நட, கட.

Conjugate like செய் the following:

வரு, போ, காட்டு, ஓடு, தொடு, எழுது, தாங்கு.

Exercise IV A.

Conjugate the present tense singular of அடி, தாங்கு

Exercise IV B. (*Oral*)

Translate the following into Tamil:

1. I love.
2. The horse runs.
3. The girl sleeps.
4. The boy writes a letter.
5. You learn.
6. The cow gives milk.
7. The mother loves.
8. The boy reads a book.
9. The man walks.
10. The ship crosses the sea.
11. The dog sees the rat.
12. The dog seizes the rat.
13. I am going.
14. The dog comes.
15. You are sleeping.

Exercise IV C.

கழுதை	a donkey	பாலம்	a bridge
தடி	a stick	பள்ளிக்கூடம்	a school

Translate into English:

1. வண்ணான் கழுதையைத் தடியால் அடிக்கிறான்.
2. கரடி பழத்தை இரண்டு கைகளால் பிடிக்கிறது.
3. மான் ஆற்றைப் பாலத்தால் கடக்கிறது.
4. தச்சன் ஒரு பெட்டியை எனக்குச் செய்கிறான்.
5. அவன் நேற்று நாலு நாற்காலிகளைச் செய்தான்.
6. குதிரை வேகமாய் ஒடுகிறது.
7. என் சகோதரன் பள்ளிக்கூடத்துக்கு வேகமாய் ஒடினான்.
8. நீ இன்றைக்கு வீட்டுக்குப் போகிறாயா?
9. நான் நேற்று வீட்டுக்குப் போனேன்.
10. பெண் புஸ்தகத்தை மேசையில் வைக்கிறாள்.

Exercise IV D.

Translate into Tamil:

1. Did you give this to him?
2. Are you giving this to me?
3. The watchman opens the door with a key.
4. The mother loves her daughter.
5. The little child learns her lessons well.
6. Did you see the large squirrel on that tree?
7. He wrote a letter to his father yesterday.
8. I am writing a letter to my mother.
9. Are you coming to the well?
10. He sleeps in that house.

Lesson V.

The Present Tense—Plural.

பார் + க்கிற் +	ஓம்	=	பார்க்கிறோம்
	ஈர்கள்		பார்க்கிறீர்கள்
	ஆர்கள்		பார்க்கிறார்கள்
	அன		பார்க்கின்றன.

செய் + கிற் +	ஓம்	=	செய்கிறோம்
	ஈர்கள்		செய்கிறீர்கள்
	ஆர்கள்		செய்கிறார்கள்
	அன		செய்கின்றன.

Note that in the neuter gender, plural, 3rd person, ன் is inserted before the ற. This is sometimes found in reading, in other persons also e.g. பார்க்கின்றேன்.

Exercise V A.

Conjugate in full the Present Tense

(a) of பிடி. (b) of எழுது.

Exercise V B. *(Oral)*

Translate into Tamil:

1. We run.
2. You are all running.
3. The boys run.
4. The girls run.
5. The stags run.
6. Men sleep.
7. You all sleep.
8. We sleep.
9. Cats sleep.
10. Mothers love.
11. Cows give milk.
12. Boys read books.
13. The oxen cross the river.
14. We go home.
15. All of you come here.
16. The carts cross the bridge.
17. The girls write in books.
18. Ships are on the sea.
19. Fish are in the river.
20. Horses are in the field.

Exercise V C.

பிள்ளைகள் = children
எப்போது = when
கதை = story
ஓட்டு = to drive

Translate into English:

1. அவர்கள் எல்லாரும் என் என் தகப்பனுடைய கடைக்குப் போகிறார்கள்.
2. நீங்கள் எப்போது அவனுடைய வீட்டுக்கு வருகிறீர்கள்.
3. வண்ணானுடைய மாடுகள் நன்றாய் ஓடுகின்றன.
4. நாங்கள் அவனுடைய சகோதரிகளுக்குக் கடிதங்களை எழுதுகிறோம்.
5. பையன்கள் எல்லாரும் என் அறையில் இருக்கிறார்கள்.
6. பிள்ளைகள் எல்லாரும் நல்ல கதையைப் படிக்கிறார்கள்.
7. நாம் ஊரில் பல கரடிகளைப் பார்க்கிறோம்.
8. வண்டிக்காரர்கள் புதிய வண்டிகளை ஓட்டுகிறார்கள்.
9. நீங்கள் எல்லாரும் இன்றைக்கு எங்கே போகிறீர்கள்.
10. பெண்கள் இப்போது வீட்டுக்குப் போகிறார்கள்.

Exercise V D.

Translate into Tamil:

1. Why are you all looking at that ship?
2. When does the dhoby come to your house?
3. The king's horses run swiftly.
4. We all wrote letters to his brother.
5. The children are all asleep in the house.
6. The boys are reading a good book.
7. Many stags are in that forest.
8. The carpenters are making new chairs.
9. Are you all going home today?
10. The oxen are drinking water in that river.

Lesson VI.

Revision—Past and Present Tenses.

Exercise VI A.

Write in parallel columns the Present and Past Tenses in full of போ, கொடு.

Exercise VI B.

மாத்திரம் = only.

Translate into English :

1. பையன் என் அறையில் இருக்கிறான்.
2. பையன் என் அறையில் இருந்தான்.
3. நேற்று அநேக மான்களைப் பார்த்தோம். இன்றைக்கு இரண்டு மான்களை மாத்திரம் பார்க்கிறோம்.
4. நேற்று மூன்று புஸ்தகங்களை உனக்குக் கொடுத்தேன். இப்பொழுது ஒரு புதிய புஸ்தகத்தைக் கொடுக்கிறேன்.
5. என் பிள்ளைகள் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள்.
6. உன் பிள்ளைகள் இந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள்.
7. உன் பூனை அந்த மேசையில் தூங்குகிறது.
8. இராஜாவினுடைய குதிரைகள் வேகமாய் ஓடின.
9. நீங்கள் அவனுடைய தோட்டத்திலிருந்து அநேக பூக்களை எனக்குக் கொண்டுவந்தீர்கள்.
10. மரங்களில் அந்தப் பட்சிகளைப் பார்க்கிறாயா?

Exercise VI C.

Translate into Tamil :

1. Today I see three ships on the sea. Yesterday you saw only two ships.
2. My sister read that book : her brother is reading it today.
3. We saw a large well in your garden.
4. Do you drink the water of that well?
5. We were in the king's house yesterday.
6. We are in the carpenter's shop today.
7. That chair was in my room yesterday; it is in your house today.
8. Those dogs run quickly to the field. The stag sees them; it runs quickly to the river.

Lesson VII.

Formation of Adjectives

I. Very commonly in Tamil the affix ஆன is added to abstract nouns to make adjectives.

உயரம்	height	உயரமான	high
அகலம்	breadth, width	அகலமான	broad, wide
நீளம்	length	நீளமான	long
சிவப்பு	redness	சிவப்பான	red
பச்சை	greenness	பச்சையான	green
பலம்	strength	பலமான	strong
அழகு	beauty	அழகான	beautiful
மெதுவு	slowness	மெதுவான	slow
வேகம்	swiftness	வேகமான	fast

Literally ஆன means "which has become," so that பலமான = which has become strength அழகான = which has become beautiful, and so on.

II. Sometimes the prefix உள்ள is used instead of ஆன.

Thus புத்தி	wisdom	புத்தியுள்ள	wise
நீதி	justice	நீதியுள்ள	just
இரக்கம்	mercy	இரக்கமுள்ள	merciful
சந்தோஷம்	joy	சந்தோஷமுள்ள	joyful

உள்ள literally means "who or which possesses" so that புத்தியுள்ள = who or which possesses wisdom.

Exercise VII A.

நியாயாதிபதி = judge   கட்டடம் = building

Translate into English:

1. அவன் ஒரு புத்தியுள்ள பையன்.
2. இவர் நீதியுள்ள நியாயாதிபதி.
3. அவனுடைய தாயார் இரக்கமுள்ள ஸ்திரீ.
4. அந்த ஊரில் ஒரு உயரமான கோவில் இருக்கிறது.
5. அந்த நீளமான தடியை எனக்குக் கொடு.
6. அங்கே ஒரு அகலமான ஆற்றைக் கடந்தாயா?
7. பையன் ஒரு அழகான படத்தை எழுதினான்.
8. தோட்டக்காரன் ஒரு பலமுள்ள மனிதன்.
9. இந்த வீடு ஒரு பலமான கட்டடம்.
10. வண்டிக்காரன் ஒரு வேகமான குதிரையை ஓட்டினான்.

Exercise VII B.

Translate into Tamil:

1. In my box there is a red book. Bring it here.
2. Your sister is a happy girl.
3. The oxen are crossing a broad river.
4. This is a high building: that is a wide field.
5. Give those beautiful flowers to your mother.
6. This is a slow horse.
7. He was a just king; they are merciful judges.
8. The carpenter is making strong chairs.
9. In that forest there are many swift stags.
10. Wise men read good books.

Lesson VIII.

Composite Nouns

Composite nouns are formed by adding the terminations of the pronouns of the third person to adjectives.

e. g. நல்ல + அவன்	=	நல்லவன்	a good man.
நல்ல + அவள்	=	நல்லவள்	a good woman.
நல்ல + அது	=	நல்லது	a good thing.
நல்ல + அவர்கள்	=	நல்லவர்கள்	good people.
நல்ல + அவைகள்	=	நல்லவைகள்	good things.

Exercise VIII A (*Oral*).

Write the Tamil for: a just man; a merciful woman; a great thing; wise men; red things; beautiful things; a beautiful woman; cheerful people; a high thing; a broad thing.

Exercise VIII B.

Translate into English:

1. அவன் ஒரு பெரியவன்.
2. அவள் ஒரு இரக்கமுள்ளவள்.
3. அது பலமானது.
4. அவர்கள் புத்தியுள்ளவர்கள்.
5. என் குதிரை வேகமானது.
6. உன் தகப்பனார் நல்லவர்.
7. அந்தத் தேசத்தின் அரசர்கள் நீதியுள்ளவர்கள்.
8. இந்தப் படங்கள் அழகானவைகள்.
9. என் வீடு உயரமானது.
10. அரசன் இரக்கமுள்ளவன்.

Exercise VIII C.

Translate into Tamil:

1. He is a wise man.
2. She is a wise woman.
3. It is a wise thing.
4. This flower is a red one; that flower is a green one.
5. These pictures are beautiful ones.
6. Your father is a just man.
7. These fields are wide ones.
8. Those buildings are high ones.
9. My sister is happy.
10. Those kings are wise men.

Lesson IX.

Prepositional Affixes

மேல், ஒடு, இட்ட.

The work done in English by prepositions is done in Tamil by affixes added to nouns.

I. ON or UPON.

To express "On" or "Upon", add மேல் to the inflectional base (See Lesson II).

Generally இன் is inserted between the base and the prepositional affix (except when the word ends in ன்).

e. g. மேசையின் மேல்	= on the table.
மரத்தின்மேல்	= on the tree.
நிலத்தின்மேல்	= on the ground.
பையன்மேல்	= on the boy.

Exercise IX A.

Translate into English :

1. என் புஸ்தகம் மேசையின்மேல் இருக்கிறது.
2. நான் அந்த மாத்தின்மேல் மூன்று காகங்களைப் பார்த்தேன்.
3. உன் பூனை என் படுக்கையின்மேல் இருக்கிறது.
4. பசுவின் வாலின்மேல் ஒரு ஈ இருக்கிறது.
5. என் தம்பி கப்பலின்மேல் இருக்கிறான்.

Exercise IX B.

Translate into Tamil :

1. The ship is on the sea.
2. Your key is on my box.
3. My hat is in your box.
4. Your book is on the chair.
5. The dog is on the mat.
6. There is a fly on your hand.

II. WITH, TOGETHER WITH, ALONG WITH.

The English WITH is generally expressed in Tamil by the instrumental case. But if it means "together with," or "along with," it is expressed by adding ஒடு to the inflectional base.

e.g. என் சகோதரனோடு அந்த ஊருக்குப் போனேன்.
I went to that village *with* my brother.

என்னோடு வா come *with* me.

Notice the difference between the following two sentences.

அவன் பெட்டியைச் சாவியால் திறந்தான்.
He opened the box *with a key.* (instrument)
அவன் பெட்டியைச் சாவியோடு கொண்டுபோனான்.
He took the box *with the key.* (accompaniment)

Exercise IX C.

Translate into English:

1. நான் என் சகோதரியோடு தோட்டத்துக்குப் போனேன்.
2. என் தகப்பன் தோட்டக்காரனைக் காவற்காரனோடு பார்த்தான்.
3. வண்டிக்காரன் என் சகோதரனோடு காட்டுக்குப் போனான்.
4. அவனுக்குப் புஸ்தகத்தோடு படத்தைக் கொடு.
5. தாய் அவளுக்கு தேனோடு பாலைக் கொடுத்தாள்.

Exercise IX D.

Translate into Tamil:

1. Go along with him to the shop.
2. Come with me to the dhoby's house.
3. The fox went with the stag to the well.
4. Drink water with your fruit.
5. Bring me the knife with the wood.

Note. Instead of ஓடு, உடன் may be used generally with inanimate things.

e.g. பெட்டியைச் சாவியுடன் கொண்டுவா.
நாற்காலியை தொப்பியுடன் கொண்டுவந்தான்.

III. NEAR.

To express 'near' or 'close to' add கிட்ட or (கிட்டே) to the inflectional base.

e.g. அந்த மரத்தின் கிட்ட near that tree.
என் கிட்ட near me.

Exercise IX E.

உட்காரு = sit

Translate into English:

1. பையன் வீட்டின் கிட்ட போனான்.
2. கோவில் என் தோட்டத்தின் கிட்ட இருக்கிறது.
3. உன் பெட்டி மேசையின் கிட்ட இருக்கிறது.
4. அந்தப் பெரிய மேகம் சூரியனின் கிட்ட இருக்கிறது.
5. அந்த மேசையின்மேல் புஸ்தகத்தின் கிட்ட கத்தி இருந்தது.
6. அவன் என் படுக்கையின் கிட்ட உட்கார்ந்தான்.

Exercise IX F.

Translate into Tamil:

1. His house is near your well.
2. Is it near your shop?
3. Put the chair near my bed.
4. Come near this picture.
5. The fox went near the bird.
6. My brother came with me to my mother's room.
7. He sat on the table; I sat on the chair.
8. The table was near my chair.
9. Sit near me; sit on this chair.
10. I saw your book on the table.

Exercise X.

Revision

Translate the following into Tamil:

1. Where is the dhoby's house? Is it near the well? It is near the carpenter's shop.
2. Go with me to the village.
3. I hit the table with my book.
4. Is my hat on the table? I saw it on the chair.
5. The king gave the just judge a good present.
6. The watchman opens the strong box with a broad key.
7. Yesterday I put a green book on the table. Today I see two red books there.
8. The donkey crosses the long bridge near the forest.
9. Wise boys go to a good school.
10. The stag is swift: the horse runs swiftly.

Lesson XI.

Cases—Ablative of Motion.

To express MOTION FROM இருந்து is added to the locative case.

e.g. அந்த ஊரிலிருந்து வந்தேன். I came *from that village.*

என்னை வீட்டிலிருந்து கூப்பிட்டான். He called me *from the house.*

Sometimes the form—இனின்று is used instead of இலிருந்து.

e.g. ஊரினின்று, வீட்டினின்று.

When expressing motion from or motion to WITH THE NAMES OF LIVING CREATURES, the case of இடம் must be used.

e.g. வீட்டுக்குப் போ go to the house.

but மனிதனிடத்துக்கு go to *the man.*

வீட்டிலிருந்து வந்தான் = he came from the house,

but மனிதனிடத்திலிருந்து வந்தான் = he came from the man.

N. B. The form இடத்துக்கு is generally changed to இடத்திற்கு.

Exercise XI A (*Oral*).

Translate into Tamil:

1. Go home. 2. Come to me. 3. Go to him.
4. I came from the house.
5. I came from my mother.
6. He went to my father. 7. Go to the well.
8. Run to the shop. 9. Run to your brother.
10. He ran from the house.

Note the difference between

இதை உன் தகப்பனுக்குக் கொடு.
உன் தகப்பனிடத்திற்குப் போ.

['Give' is not a verb of motion.]

Exercise XI B.

வைத்தியன் = a doctor   குடியானவன் = a farmer
ஜனங்கள் = people

Translate into English:

1. என் தாய் வைத்தியனுடைய வீட்டிலிருந்து வருகிறாள்.
2. குடியானவனுடைய பசுக்கள் அந்தப் பெரிய வயலிலிருந்து வந்தன.
3. வண்ணான் என் வீட்டிலிருந்து உன் வீட்டுக்குப் போனான்.
4. அவன் கடையிலிருந்து என்னிடத்துக்கு வந்தான்.
5. அவன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு ஓடினான்.

6. சிறிய பிள்ளை தாயிடத்துக்கு வந்தது.
7. நீ கிணற்றுக்குப் போனாயா?
8. நீ உன் அறைக்குப் போ.
9. அவன் கப்பலிலிருந்து ஜனங்களைக் கூப்பிட்டான்.
10. நான் பள்ளிக்கூடத்திலிருந்து ஊருக்கு ஓடினேன்.

Exercise XI C.

Translate into Tamil:

1. Go to him; come to me.
2. Go to the garden; go to the watchman.
3. He came from school. I came from the farmer.
4. He goes from village to village.
5. I came from him to you.
6. He runs from that man to me.
7. He went to the doctor yesterday.
8. Did you go to my father's shop?
9. When did you come to your mother?
10. When did you give the book to your sister?

Lesson XII.

Cases (concluded)

The VOCATIVE CASE is usually formed by adding-ஏ to the Nominative.

e. g. பையனே boy! இராஜாவே O king!
Sometimes ஆ is added instead of ஏ

e. g. ஐயா sir! பையா boy!
அண்ணா O elder brother.

The DATIVE CASE sometimes has ஆக added to it. This is especially used to express for, or on behalf of.

ஒரு படத்தை என் சகோதரிக்காக வாங்கினேன்.
I bought a picture *for my sister*.

எனக்காக அங்கே போனான்.
He went there on my behalf.

We can now decline a word fully.

Singular

Nom.	மரம்	மனிதன்
Voc.	மரமே	மனிதனே
Acc.	மரத்தை	மனிதனை
Gen.	மரத்தின் or	மனிதனின் or
	மரத்தினுடைய	மனிதனுடைய
Dat.	மரத்துக்கு or	மனிதனுக்கு or
	மரத்துக்காக	மனிதனுக்காக
Loc.	மரத்தில்	மனிதனிடத்தில்
Abl. of motion.	மரத்திலிருந்து	மனிதனிடத்திலிருந்து
Inst.	மரத்தினால்	மனிதனால்

Plural

Nom.	மரங்கள்	மனிதர்கள்
Voc.	மரங்களே	மனிதர்களே
Acc.	மரங்களை	மனிதர்களை
Gen.	மரங்களுடைய	மனிதர்களுடைய
Dat.	மரங்களுக்கு or	மனிதர்களுக்கு or
	மரங்களுக்காக	மனிதர்களுக்காக
Loc.	மரங்களில்	மனிதர்களிடத்தில்
Abl. of motion.	மரங்களிலிருந்து	மனிதர்களிடத்திலிருந்து
Inst.	மரங்களால்	மனிதர்களால்

Exercise XII A.

Decline as above

(a) பையன்

(b) பாடம்.

Exercise XII B.

Translate into English :

1. அரசனே, எனக்குப் பல இறுங்களைக் கொடு.
2. பையனே, இந்தப் புஸ்தகத்தைப் படித்தாயா?
3. பையா, வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு வேகமாக ஓடு.
4. ஆளே, உன் ஊரிலிருந்து இங்கே எப்போது வந்தாய்?
5. மனிதா! நீ உன் ஊருக்கு எப்பொழுது போகிறாய்?
6. வண்ணானே, என் உடுப்புகளை நாளைக்கு கொண்டு வா.
7. காவற்காரா! தோட்டத்தில் எத்தனை மரங்கள் இருக்கின்றன?
8. இராஜாவே, எனக்காக தோட்டக்காரன் இங்கே வந்தான்.

Exercise XII B.

Translate into Tamil :

1. When did you come here, my boy ?
2. Father, why does the gardener go to the well ?
3. My son, he goes to the well for water.
4. Watchman, when did the doctor come to the house ?
5. Sir, the doctor came here yesterday evening.
6. O king, the judge was a merciful man.
7. Mother, when did you go to the church ?
8. My child, I am going to church now along with your sister.
9. Doctor, I did this on your brother's behalf.
10. My father went to the judge on my behalf.

Lesson XIII.

Personal Pronouns (*Singular*)

In accordance with the rule in Lesson XI Personal Pronouns standing for living beings must in the Dative and Locative, use the case of—இடம்.

1st Person Singular.

Nom.	நான்	I
Acc.	என்னை	me
Gen.	என் or என்னுடைய	my
Dat	எனக்கு or	to *or* for me
	எனக்காக	on my behalf
Loc.	என்னிடத்தில்	in me
Abl. of motion.	என்னிடத்திலிருந்து	from me
Inst.	என்னால்	by me.

2nd Person Singular

Nom.	நீ	you
Acc.	உன்னை	you
Gen.	உன் or உன்னுடைய	your
Dat.	உனக்கு or உனக்காக	to *or* for you on your behalf
Loc.	உன்னிடத்தில்	in you
Abl. of motion.	உன்னிடத்திலிருந்து	from you
Inst.	உன்னால்	by you.

3rd Person Singular.

Masculine.

Nom.	அவன்	he
Acc.	அவனை	him
Gen.	அவனுடைய	his
Dat.	அவனுக்கு or	to *or* for him
	அவனுக்காக	on his behalf
Loc.	அவனிடத்தில்	in him
Abl. of motion.	அவனிடத்திலிருந்து	from him
Inst.	அவனால்	by him

Feminine.

Nom.	அவள்	she
Acc.	அவளை	her
Gen.	அவளுடைய	her
Dat.	அவளுக்கு or	to *or* for her
	அவளுக்காக	on her behalf
Loc.	அவளிடத்தில்	in her
Abl. of motion.	அவளிடத்திலிருந்து	from her
Inst.	அவளால்	by her

Exercise XIII A.

கூப்பிடு	call	காலை = morning
கூப்பிடுகிறேன்	I am calling	மாலை = evening
கூப்பிட்டேன்	I called	

Translate into English:

1. நாளைக்கு காலையில் உன் தகப்பனிடத்துக்குப் போ.
2. இந்த இனாம் உன்னிடத்திலிருந்து வந்ததா?
3. உன் சகோதரி எங்கே? அவள் என் தாயிடத்துக்குப் போனாள்.
4. நான் அவனிடத்திலிருந்து வந்தேன். நீ அவனிடத்துக்குப் போ.
5. அரசன் அந்த நல்ல ஸ்திரீக்கு எதைக் கொடுத்தான்?
6. அவன் அவளுக்கு அநேக வீடுகளைக் கொடுத்தான்.
7. என்னைக் காலையில் கூப்பிடு. அவளை இங்கே கூப்பிடு.
8. உன்னுடைய பூவை அவளுக்குக் காட்டு.

Exercise XIII B.

Translate into Tamil:

1. The dogs saw you in the street.
2. Show me your hands.
3. Give her your books.
4. Call me in the morning.
5. Call him in the evening.
6. The cat came to me near the door.
7. My brother gave me fruit in the morning.
8. Is your sister in the garden? Call her.
9. The cat saw me; the birds saw the cat.
10. The horse ran from her to me.

Lesson XIV.

Personal Pronouns (*Plural*)

The following is the declension in the plural.

நாம் we (including the person spoken to, as well as the speaker).

நாங்கள் we (excluding the person spoken to).

1st Person.

Nom.	நாம் or நாங்கள்	we
Acc.	நம்மை or எங்களை	us
Gen.	நம் or நம்முடைய or எங்களுடைய	our
Dat.	நமக்கு or நமக்காக எங்களுக்கு or எங்களுக்காக	to *or* for us
Loc.	நம்மிடத்தில் or எங்களிடத்தில்	in us
Abl. of motion.	நம்மிடத்திலிருந்து or எங்களிடத்திலிருந்து	from us
Inst.	நம்மால் or எங்களால்	by us.

2nd Person.

Nom.	நீங்கள்	you
Acc.	உங்களை	you
Gen.	உங்கள் or உங்களுடைய	your
Dat.	உங்களுக்கு or உங்களுக்காக	to *or* for you
Loc.	உங்களிடத்தில்	in you
Abl. of motion.	உங்களிடத்திலிருந்து	from you
Inst.	உங்களால்	by you.

3rd Person.

Nom.	அவர்கள்	they
Acc.	அவர்களை	them
Gen.	அவர்கள் or அவர்களுடைய	their
Dat.	அவர்களுக்கு or அவர்களுக்காக	to *or* for them
Loc.	அவர்களிடத்தில்	in them
Abl. of motion.	அவர்களிடத்திலிருந்து	from them
Inst.	அவர்களால்	by them.

Exercise XIV A.

சாகிறான் = he dies   செத்தான் = he died
சண்டை = a battle   வீரன் = a soldier

Translate into English:

1. நாங்கள் உங்களுடைய நாற்காலிகளில் உட்காருகிறோமா?
2. இந்தப் புஸ்தகங்களை எங்களுக்குக் கொடு. அந்தப் புஸ்தகங்களை அவர்களுக்குக் கொடு.
3. எங்களுடைய பிள்ளைகள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள்.
4. பையன் உங்களிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்தான்.
5. பாம்பு உங்களைக் கடித்ததா?
6. நீ வீட்டில் அவர்களிடத்திற்குப் போ. அவர்களுக்கு இந்த உடுப்புகளைக் கொடு.
7. பெண் நேற்று எங்களின் கிட்ட உட்கார்ந்தாள்.
8. வீரர்கள் நமக்காக சண்டையில் செத்தார்கள்.

Exercise XIV B.

பதில் = answer.

Translate into Tamil:

1. Did you call us?
2. Did you see us in the street?
3. Did I give you our answer?
4. Tell us a story; show us your book.
5. Children, your mother sent you these beautiful presents.
6. They came here on our behalf.
7. These soldiers came to us from you.
8. Your brother came with us to the doctor's house.
9. Is the shop near our house? It is in front of their garden.
10. Our king is wise; your judge is merciful.

Lesson XV.

Pronoun—Neuter, Third Person

The following is the declension of the pronoun in the 3rd person, singular and plural.

	Singular.		Plural.	
Nom.	அது	it	அவைகள்	they
Acc.	அதை	it	அவைகளை	them
Gen.	அதன் *or* அதனுடைய	its	அவைகள், அவைகளின் or அவைகளுடைய	their
Dat.	அதற்கு	to it	அவைகளுக்கு	to them
Loc.	அதில்	in it	அவைகளில்	in them
Abl. motion.	அதிலிருந்து	from it	அவைகளிலிருந்து	from them
Instr.	அதால்	by it	அவைகளால்	by them

Note. அதுக்கு is generally changed to அதற்கு.

Exercise XV A.

அதோ = over there   குட்டி = a kid
கன்று = a calf   வெள்ளை = white

Translate into English:

1. இது என் புஸ்தகம்; நீ அதை வாசித்தாயா?
2. அவைகள் உங்களுடைய புஸ்தகங்களா? நீங்கள் அவைகளை படிக்கிறீர்களா?
3. என் தொப்பிகள் உன் பெட்டியில் இருக்கின்றன. அவைகளில் ஒரு வெள்ளைத் தொப்பி இருக்கிறது. அதை எனக்குக் கொண்டு வா.
4. அவைகள் எங்களுடைய பசுக்கள்; அவைகளுடைய கன்றுகளை அதோ பார்.
5. அது என்னுடைய தடி; அதால் அந்தப் பாம்பை அடி.
6. என் பெட்டி அதோ இருக்கிறது; அதில் உன் புஸ்தகம் இருக்கிறதா? பார்.
7. என் ஆடுகள் எங்கே? அவைகளின் குட்டிகள் எங்கே?
8. அவைகள் உன் மரங்களா? அவைகளிலிருந்து, நாலு பழங்களை எனக்குக் கொண்டு வா.
9. உன் வீடு எங்கே? அதை எனக்குக் காட்டு.
10. உங்களுடைய அறை எங்கே இருக்கிறது? அதில் நாற்காலிகள் இருக்கின்றனவா?

Exercise XV B.

Translate into Tamil:

1. Give it to me; give them to your brother.
2. Where are your books? Show them to me.
3. Look at these horses; where are their tails?
4. Here are four dogs. Give them water.
5. My key is in your box. Is your key in it?
6. Give me that stone. That boy hit you with it.
7. They are your flowers. Give them to your sister.
8. These are our boxes. Are your books in them?
9. That chair is large. Did you sit in it?
10. This is his stick. Did he hit the donkey with it?

Lesson XVI.

The Imperative Mood

The Singular Imperative has the same form as the root.

e. g. தேடு, பார், கொடு, வா, போ, நட.

N. B. This is only used in addressing inferiors.

The Honorific or Polite Imperative is formed by adding உம் to the Singular Imperative. It has the pronoun நீர் for its subject.

e. g. தேடியும், பாரும், கொடும், வாரும், போம் and நடவும்.

It is more polite than the Singular Imperative.

The Plural Imperative (also Honorific) is formed by adding உங்கள் to the singular imperative.

e. g. தேடியுங்கள், பாருங்கள், கொடுங்கள், வாருங்கள், போங்கள், நடவுங்கள்.

Exercise XVI A.

Write in parallel columns (a) the singular imperative (b) the honorific imperative (c) the plural imperative of the Tamil equivalents of the following verbs : sit, show, learn, write, run, be, read, sleep, walk, bite, drink, open, do, touch, hit, put, seize, go, come, look.

Honorifics.

It is usual in Tamil only to use the 2nd person singular of verbs and pronouns, and the singular of the Imperative Mood, when addressing a person of inferior rank, or sometimes an equal when speaking familiarly. In all other cases the plural form is used.

I. So நீ தோட்டத்திற்குப் போ would be used to a cooly or servant ; but to a friend or companion you would say நீங்கள் தோட்டத்திற்குப் போங்கள். Sometimes for this purpose instead of the form நீங்கள், a special form நீர் is used.

e. g. நீர் தோட்டத்திற்குப் போங்கள்.
நீர் என் மகனைப் பார்த்தீரா?

II. To show respect, the following affixes are often added to nouns and pronouns.—ஆர் or ஆர்கள்.

e. g. தகப்பனார் = father, தாயார் = mother, and உபாத்தியாயர் = teacher.

III. The word அவர்கள் is sometimes used as an affix to a noun to denote respect.

e. g. துரையவர்கள் = gentlemen and ஐயரவர்கள் = clergymen.

Exercise XVI B.

ஏழை = poor, மாமன் = uncle, சீக்கிரத்தில் = soon or quickly, கொஞ்சம் = a little, some.

Translate into English :

1. பையன்களே, சீக்கிரத்தில் வீட்டுக்கு ஓடுங்கள்.
2. வேலைக்காரர்களே, வேலையை நன்றாய் செய்யுங்கள்.
3. பிள்ளையே, உன் புஸ்தகத்தைப் படி.
4. ஐயா! எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்.
5. இந்தப் புஸ்தகங்களை அந்த ஏழைப் பையனுக்குக் கொடு.
6. பிள்ளைகளே, உங்கள் தகப்பனை நேசியுங்கள்.
7. பிள்ளையே, உன் சகோதரியை நேசி.
8. மாமா, என் படங்களைப் பாருங்கள்.
9. வண்டிக்காரா, வண்டியை வேகமாய் ஓட்டு.
10. நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள்.

Exercise XVI C.

Translate into Tamil :

1. Children, look at the birds on that tree.
2. Father, look at my new book.
3. Call the gardener, my son.
4. Children, love your mother.
5. Give these clothes to the dhoby.
6. Boys, show your lessons to me.
7. All of you come here tomorrow morning.
8. Run quickly, children.
9. Sit on those chairs.
10. Read your books now.

Lesson XVII.

The Future Tense

The medials (See Lesson II) of the future tense are வ், ப்ப or ப.

Root + Medial + Ending.

So	பார் + ப்ப	+ ஆன் = பார்ப்பான்		he will see.
	செய் + வ்	+ ஆன் = செய்வான்		he will do.
	காண் + ப்	+ ஆன் = காண்பான்		he will see.

நான்	பார்ப்பேன்	I shall see.
நீ	பார்ப்பாய்	you will see.
அவன்	பார்ப்பான்	he will see.
அவள்	பார்ப்பாள்	she will see.
நாம்	பார்ப்போம்	we shall see.
நீங்கள்	பார்ப்பீர்கள்	you will see.
அவர்கள்	பார்ப்பார்கள்	they will see.

நான்	செய்வேன்	I shall make.
நீ	செய்வாய்	you will make.
அவன்	செய்வான்	he will make.
அவள்	செய்வாள்	she will make.
நாம்	செய்வோம்	we shall make.
நீங்கள்	செய்வீர்கள்	you will make.
அவர்கள்	செய்வார்கள்	they will make.

Of the verbs which we have learned note which form their future in ப்ப and which in வ்.

படிப்பான்	ஓடுவான்	உண்பான்
பிடிப்பான்	ஓட்டுவான்	தின்பான்
பார்ப்பான்	வருவான்	கேட்பான்
கடிப்பான்	போவான்	காண்பான்
குடிப்பான்	செய்வான்	
கடப்பான்	தொடுவான்	
நடப்பான்	தூங்குவான்	
இருப்பான்	காட்டுவான்	
வாசிப்பான்	கூப்பிடுவான்	
வைப்பான்	சாப்பிடுவான்	
நேசிப்பான்	எழுதுவான்	
கொடுப்பான்	உட்காருவான்	
திறப்பான்	சாவான்	
அடிப்பான்		

It will be better for the pupil at present to learn the three parts of each new verb as he meets it. e. g.

Present.	Past.	Future.
வருகிறான்.	வந்தான்.	வருவான்.
செய்கிறான்.	செய்தான்.	செய்வான்.
காட்டுகிறான்.	காட்டினான்.	காட்டுவான்.
பார்க்கிறான்.	பார்த்தான்.	பார்ப்பான்.
உண்கிறான்.	உண்டான்.	உண்பான்.

Exercise XVII A.

Note the following new verbs.

காண்கிறான் he sees, கண்டான் he saw, காண்பான் he will see.

கேட்கிறான் he hears, or asks, கேட்டான் he heard or asked, கேட்பான் he will hear or ask.

1. Write out the future tense in full of—போ, வாசி, தின்று.
2. Write out the three parts in the third person of all the verbs in the lists on the previous page.

Exercise XVII B.

The days of the week in Tamil are as follows.

Sunday.	ஞாயிறு	or	ஞாயிற்றுக்கிழமை.
Monday.	திங்கள்	or	திங்கள்கிழமை.
Tuesday.	செவ்வாய்	or	செவ்வாய்க்கிழமை.
Wednesday.	புதன்	or	புதன்கிழமை.
Thursday.	வியாழன்	or	வியாழக்கிழமை.
Friday.	வெள்ளி	or	வெள்ளிக்கிழமை.
Saturday.	சனி	or	சனிக்கிழமை.

Translate into English:

1. நான் உன்னை செவ்வாய்க்கிழமை காலையில் பார்ப்பேன்.
2. நீ எனக்கு இந்தப் பெட்டியைச் செய்வாயா?
3. தச்சன் உனக்கு மூன்று பெட்டிகளைப் புதன்கிழமையில் செய்வான்.
4. நாங்கள் மாலையில் உன் வீட்டில் இருப்போம்.

5. அவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் கோவிலுக்குப் போவார்கள்.
6. நீங்கள் எல்லாரும் என்னை இங்கே பார்ப்பீர்கள்.
7. பிள்ளைகள் இந்த நீளமான பாலத்தைக் கட்ப்பார்கள்.
8. உன் சகோதரி திங்கள்கிழமையில் உனக்கு இந்தப் புஸ்தகங்களைக் கொடுப்பாள்.
9. நீ உன் தாயாருக்கு நாளைக் காலையில் ஒரு கடிதத்தை எழுதுவாய்.
10. இந்தப் பையன் உனக்கு வைத்தியனுடைய வீட்டைக் காட்டுவான்.

Exercise XVII C.

Translate into Tamil:

1. Your sister will sleep in this room; you will sleep in that room.
2. The children will go to school on Thursday morning.
3. Will you give me the key of your box?
4. They will sit on those chairs; you will sit on these chairs.
5. The boy will call them from the house.
6. Will you be in the forest on Friday evening?
7. Will you all come with me to the garden?
8. You will see a man near the well on Saturday morning.
9. My father will read that book; the children will read this one.
10. The boys will love their sister.

Lesson XVIII.

Future Tense-3rd Person, Neuter

The 3rd Person, neuter gender, singular and plural in the future tense is always the same.

It is formed by adding உம் to the rcot of verbs which take கிறு in the present tense, and by adding க்கும் to the root of verbs which take க்கிறது in the present tense.

	Present Tense	Future Tense
e. g.	வருகிறது	வரும்.
	செய்கிறது	செய்யும்.
	போகிறது	போகும்.
but		
	பார்க்கிறது	பார்க்கும்.
	வைக்கிறது	வைக்கும்.

Exercise XVIII A.

Translate into English:

1 குதிரைகள் வேகமாக ஓடும்.
2. கழுதை மெதுவாக ஓடும்.
3. மாடுகள் நன்றாய் வேலை செய்யும்.
4. மீன்கள் கடலின் தண்ணீரைக் குடிக்கும்.
5. குதிரைகள் கடிக்கும்; அந்தக் குதிரை என்னைக் கடிக்குமா?
6. நாளைக்கு அந்த ஊருக்குப் போவேன்; நாய்கள் என்னோடு வருமா?
7. நாய் வீட்டில் தூங்கும்; பூனைகள் என் அறையில் தூங்கும்.
8. அந்தப் பட்சிகள் அந்த மரத்தில் தூங்கும்.
9. என் நாய் எலியைப் பிடிக்கும்.
10. வண்டி பாலத்தைக் கடக்கும்; குதிரைகள் ஆற்றைக் கடக்கும்.

Exercise XVIII B.

Translate into Tamil:

1. This horse will run swiftly; these stags will run swiftly.
2. The dog will bite; the dogs will bite.
3. This key will open my box; these keys will open your boxes.
4. The lion will seize the ox; the lions will seize the oxen.
5. The fox will see the snake; foxes will look at snakes.
6. A cat will look at a king; cats will look at kings.
7. The day will soon come; the days will soon come.
8. I shall go home; my dog will go home; the horses will go home.
9. Cats will sit on a table; my dog will sit on a chair.
10. I shall drink milk; you will drink milk; the cat will drink milk; the dogs will drink water.

Lesson XIX. Revision, The Three Tenses.

Exercise XIX A (*Oral*).

1. I go. I went. I shall go.
2. You come. You came. You will come.
3. Your mother loves. Your mother loved. Your mother will love.
4. He sees. He saw. He will see.
5. The horse runs. The horse ran. The horse will run.
6. We sleep. We slept. We shall sleep.
7. You do. You did. You will do.
8. The boys sit. The boys sat. The boys will sit.
9. The cats drink. The cats drank. The cats will drink.
10. The men will drink milk. The dogs will drink water.

Exercise XIX B.

மறுபடியும் = again.

Translate into Tamil :

1. On Monday we went to the doctor's house. On Friday I shall go there again.
2. I saw many poor children in that street. Did you see them?
3. Give your uncle's children a little water.
4. You will show me your books tomorrow. Have I seen them?
5. The children gave their mother white flowers. You will give her red flowers.
6. The bird sat on a tree. The fox sits near the tree. The fox will look at the bird.
7. Open your box. I have opened it. You will open it again tomorrow.

Lesson XX.

Numerals 1—19

1 ஒன்று
2 இரண்டு
3 மூன்று
4 நாலு or நான்கு
5 ஐந்து
6 ஆறு
7 எழு
8 எட்டு
9 ஒன்பது
10 பத்து

N.B. ஒன்று is a noun; its adjectival form is ஒரு *or* ஓர்.

The numbers 11—19 are formed as follows: Except 12 and 19 they are formed by adding one of the above to பதின்.

11 பதின் + ஒன்று = பதினொன்று
13 பதின் + மூன்று = பதின்மூன்று
14 பதின் + நாலு = பதினாலு
15 பதின் + ஐந்து = பதினைந்து
16 பதின் + ஆறு = பதினாறு
17 பதின் + எழு = பதினேழு
18 பதின் + எட்டு = பதினெட்டு

In the case of 12 and 19 the combination is modified to help the sound.

12 பதின் + இரண்டு = பன்னிரண்டு
19 பத்து + ஒன்பது = பத்தொன்பது

When used as adjectives these numbers are not declined.

175840

Exercise XX A.

வகுப்பு = class
மாத்திரம் = only
துறைமுகம் = harbour
எண்ணு = to count
எடு = to take away

Translate into English:

1. இந்த அறையில் ஏழு நாற்காலிகள் இருக்கின்றன; ஒன்றை இங்கே கொண்டுவா.
2. அந்த தெருவில் ஒரு வீடுமாத்திரம் இருக்கிறது.
3. எங்களுடைய வகுப்பில் பதினைந்து பையன்கள் இருக்கிறார்கள்.
4. நான் அந்த வயலில் பத்தொன்பது பசுக்களை எண்ணினேன்.
5. நாங்கள் கடலில் துறைமுகத்துக்கு கிட்ட பதினொன்று கப்பல்களைப் பார்த்தோம்.
6. அவன் எனக்கு பன்னிரண்டு புஸ்தகங்களைக் கொடுத்தான். உனக்குப் பதினெட்டு புஸ்தகங்களைக் கொடுப்பான்.
7. வெள்ளிக்கிழமையில் பதினான்கு ஞானிகள் அரசனிடத்துக்கு வந்தார்கள்.
8. பதினாறு மான்கள் வேகமாக ஆற்றுக்கு ஓடுகின்றன.
9. பதினேழிலிருந்து பதின்மூன்றை எடு.

TB
031,6(8)
N32

Exercise XX B.

செலவுசெய் = to spend
வாங்குகிறேன், வாங்கினேன் = to buy
விற்றேன் = I sold
துணி = cloth.

Translate into Tamil:

1. You see those twelve books there. Bring me one. Give her one. I see one. There is only one on my table.
2. Count these seventeen houses.
3. In this large house I counted fourteen rooms.
4. How many horses do you see in the field? We shall see eighteen there on Wednesday.
5. My mother gave me nineteen rupees. I spent thirteen rupees eleven annas.
6. I bought cloth for sixteen rupees. I sold my book for fifteen annas.

Take eleven away from nineteen.

Lesson XXI.

Rules of Combination II

Rule V. Certain changes take place in certain letters when they are followed by a word beginning with க், ச், த், ப்.

(*a*) Final ன் or ல் is changed to ற்.

e.g. தன் self + பெருமை - praise = தற்பெருமை self-praise பொன் gold + காப்பு bangle = பொற்காப்பு golden bangle.
கல் stone + கள் = கற்கள் stones.
பல் tooth + கள் = பற்கள் teeth.
காவல் watch + காரன் = காவற்காரன் watchman.
நில் stand + கும் = நிற்கும் it will stand.
கல் stone + சட்டி pot = கற்சட்டி stone pot.
நாலு + பது = நாற்பது forty.

(*b*) Final ண் and ள் are changed into ட்.
மண் earth + பானை pot = மட்பானை earthen pot.
நாள் day + கள் = நாட்கள் days.
கேள் hear + கும் = கேட்கும் it will hear.
முள் thorn + செடி bush = முட்செடி thorn bush.
திங்கள் + கிழமை = திங்கட்கிழமை Monday.
திங்கள் + பாடம் = திங்கட்பாடம் Monday's lesson.

Exercise XXI A.

தட்டான் = goldsmith.

Translate into English:

1. என் வயலில் முட்செடியைப் பார்த்தாயா?
2. தச்சனுடைய அறையில் ஒரு கற்சட்டி இருக்கிறது.
3. தட்டான் என் தாயாருக்கு அந்தப் பொற்பானையைச் செய்தான்.
4. வேலைக்காரி மட்பானையை வாங்கினாள்.
5. காவற்காரன் அந்தக் கற்பானையை இங்கே கொண்டு வந்தானா?
6. என் தோட்டத்தில் பல முட்செடிகள் இருக்கின்றன.

Exercise XXI B.

Translate into Tamil:

1. I bought forty stone pots at the shop.
2. The goldsmith sold me a golden jar.
3. On Monday the watchman brought this earthen pot to the gardener.
4. In a week there are seven days.
5. How many weeks are there in fourteen days?
6. This stone pot will stand in my room.
7. Go quietly; the stag will hear you.
8. Did you see his teeth?
9. We counted forty stones in that river.
10. The doctor spent seventeen rupees on a large golden jar.

Lesson XXII.

Prepositional Affixes II

முன், பின், கீழ்.

N.B. ஏ is often added to these for emphasis making முன்னே, பின்னே, கீழே.

(1) To express BEFORE *or* IN FRONT OF *add* முன் to the DATIVE CASE.

e.g. வீட்டுக்கு முன் in front of the house.
எனக்கு முன் before me.

முன் is used to express 'ago' in the English idiom; e. g. many years ago, அநேக வருஷங்களுக்கு முன்.

Sometimes முன் takes the form முன்னே, or முன்னாலே or முன்பு.

(2) To express AFTER *or* BEHIND *add* பின் to the DATIVE CASE.

உனக்குப் பின் after you.
பையனுக்குப் பின் behind the boy.

The ப் is doubled according to the Rules of Combination (Book II, Lesson 8)

Sometimes பின் takes the form of பின்னே or பின்னாலே or பின்பு.

(3) To express UNDER *or* BENEATH *add* கீழ் to the DATIVE CASE.

e.g. நாற்காலிக்குக் கீழ் = under the chair.
மரத்துக்குக் கீழ் = beneath the tree.

க் is doubled according to the Rule of Combination Lesson 8, Book II.

N.B. These affixes may also be used with the Inflectional Base instead of the Dative Case, and are commonly so used with the names of animals and things.

e.g. வீட்டின் பின், வீட்டின் முன், வீட்டின் கீழ்.

Exercise XXII A.

Translate into English:

1. நான் இரண்டு நாய்களை உன் வீட்டுக்குமுன் பார்த்தேன்.
2. என் வயல் கோவிலுக்குப்பின் இருக்கிறது.
3. பையனுடைய புஸ்தகம் மேசையின்கீழ் இருக்கிறது.
4. மூன்று நாட்களுக்குமுன் நாங்கள் உன் கடையில் இந்தத் துணியை வாங்கினோம்.
5. நாளைக்கு நீ நியாயாதிபதிக்குமுன் போவாய்.
6. அந்த மரத்தின்கீழ் அந்த நாற்காலியின்மேல் உட்காருங்கள்.
7. உன் அறையிலிருந்து அவனுக்குப்பின் வந்தேன்.

Exercise XXII B.

தேசம் = country   உடுப்புகள் = clothes.

Translate into Tamil:

1. The woman came to the shop after him.
2. I walked behind my father; my brother walked behind me.
3. There were two bears under that tree.
4. Go before him to the village.
5. Seven years ago I came to his country.
6. Many weeks ago we bought these clothes.
7. Look in my room for it; look under the table.
8. Run in front of the cart; we shall run behind you.
9. Where is my sister? She is in the garden under a large tree.
10. The dog drove the stag in front of the house.

Lesson XXIII.

Numerals—Tens and Hundreds

The 'tens' are formed by combining numbers 1–9 with பது.

20 இருபது. இரு (adjectival form of இரண்டு and பது (the form பத்து takes in combination)

30 முப்பது. மு (adjectival form of மூன்று) and பது.

40 நாற்பது. நாலு + பது (For change from ல் to ற் see Lesson XXI a)

50 ஐம்பது. ஐந்து + பது.

60 அறுபது. ஆறு + பது (note the shortening of the first syllable).

70 எழுபது. ஏழு + பது (again the shortening of the first syllable).

80 எண்பது. எட்டு + பது.

90 தொண்ணூறு. A special word from தொள் and நூறு and means less than 100.

100 நூறு.

Just as the tens are formed by combining numbers 1 to 9 with பது, the hundreds are formed by combining them with நூறு.

100 நூறு

200 இருநூறு இரு and நூறு

300 முந்நூறு மு and நூறு (note doubling of ந)

400 நானூறு நாலு and நூறு

500 ஐந்நூறு ஐ and நூறு (again doubling of ந)

600 அறுநூறு ஆறு + நூறு with shortening of the first syllable

700 எழுநூறு ஏழு and நூறு with shortening of first syllable

800 எண்ணூறு எட்டு and நூறு

900 தொள்ளாயிரம் தொள் and ஆயிரம் meaning less than thousand

1000 ஆயிரம்

Exercise XXIII A.

மோதிரம் = ring
முட்டை = an egg
வியாபாரி = merchant
பட்டணம் = a town
அல்லது = or

Translate into English:

1. எழுபது அல்லது எண்பது மனிதர்கள் பட்டணத்துக்குப் போனார்கள்.
2. இந்த வகுப்பில் முப்பது பையன்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் முந்நூறு பையன்கள் இருக்கிறார்கள்.
3. வியாபாரி நானூறு மோதிரங்களை வாங்கினான். ஒரு வாரத்தில் ஐம்பதை விற்றான்.
4. குடியானவன் ஒரு மாதத்தில் எழுபது முட்டைகளை விற்றான்.
5. நான் அந்தப் பெரிய அறையில் அறுநூறு புஸ்தகங்களை எண்ணினேன்.
6. நாங்கள் ஒரு நாளில் ஐம்பது மீன்களைப் பிடித்தோம்.
7. நான் தொள்ளாயிரம் ரூபாய்(களு)க்கு ஒரு வீட்டை வாங்கினேன்.

Exercise XXIII B.

Translate into Tamil:

1. There are thirty days in this month.
2. I counted sixty cows in the farmer's field.
3. In our village there are eighty houses; in this town there are three hundred.
4. I bought ninety eggs yesterday at the shop.
5. In this large town there are ninety streets; will there be nine hundred houses in it?
6. In those ships we saw four hundred men.
7. My father came to this house sixty years ago.

Lesson XXIV.

The Verbal Participle

In Tamil there is one part of the verb called the verbal participle (sometimes the adverbial participle) which is very common in use, but which has no exact equivalent in English Grammar. Its use will soon be learnt, when the pupil commences reading Tamil books.

Formation.

1. The verbal participle is formed from the past tense of a verb by dropping the personal ending (என், ஆய், ஆன், etc.) and putting உ in its place.

e.g.	Past Tense.	Verbal Participle.
	கொடுத்தான்	கொடுத்து
	பார்த்தான்	பார்த்து
	கேட்டான்	கேட்டு
	வந்தான்	வந்து
	செய்தான்	செய்து

2. Verbs whose roots end in–உ and which form the past tense in–இனேன் are an exception to this rule. These simply drop the personal ending–னேன் and form the verbal participle in–இ.

e.g.	Root	Past Tense	Verbal Participle
	ஓடு	ஓடினேன்	ஓடி
	காட்டு	காட்டினேன்	காட்டி

3. The following common verbs form their verbal participle irregularly.

e.g.	Root	Past Tense	Verbal Participle
	சொல்லு say	சொன்னேன்	சொல்லி
	போ go	போனேன்	போய்
	ஆ become	ஆனேன்	ஆய்

Exercise XXIV A.

Write out the verbal participle of the following verbs.

1. பிடி, கடி, உட்காரு; இரு, நட, திற.
2. எழுது, தூங்கு, வாங்கு.

Use of verbal participles

There are many uses which will best be learned through reading Tamil books. One common use is to express a subordinate action performed by the subject of the principal verb. In English such actions are expressed by a series of finite verbs coupled together by conjunctions. In Tamil all but the last are expressed by verbal participles.

e.g. சிங்கம் தன் நிழலைப் பார்த்து வேறொரு சிங்கமென்று எண்ணி கிணற்றில் பாய்ந்து சேற்றில் அழுந்திச் செத்தது.

The lion *saw* its own shadow and *thinking* that it was another lion *jumped* into the well and *sunk* in the mud and was killed.

Exercise XXIV B.

மூடினான் = he closed	ஆடு = dance
கொன்றான் = he killed	சமீபத்தில் = near
திருடன் = thief	ஜெயி – conquer
விளையாடு = play	செய்தி = news, message

Translate into English:

1. தச்சன் கடைக்குப் போய் மரத்தை வாங்கினான்.
2. என் தகப்பனார் என் அறைக்கு வந்து எனக்குப் பத்து ரூபாய்கள் கொடுத்தார்.
3. திருடன் என்னைப் பார்த்து வெளியே வேகமாய் ஓடினான்.
4. தட்டான் அந்த பொன் மோதிரத்தைச் செய்து எனக்குக் கொடுத்தான்.
5. தோட்டக்காரன் இங்கே வந்து என்னைப் பார்த்தான்.
6. வண்டிக்காரன் என்னிடத்திற்கு வந்து செய்தியைச் சொல்லிப் போனான்.
7. என் மகன் பாடத்தை எழுதி அதை எனக்குக் காட்டினான்.
8. குழந்தைகள் ஓடி ஆடி, விளையாடுகிறார்கள்.
9. புலி சமீபத்தில் வந்து மனிதனைப் பிடித்துக் கொன்று தின்றது.
10. அவன் உன் பெட்டியை மூடி என் பெட்டியைத் திறந்தான்.

Exercise XXIV C.

Translate into Tamil:

1. Go to your father and tell him.
2. I went to his house and told him.
3. He came here and told me.
4. She went to the shop and bought four eggs.
5. The horse saw a man's shadow and ran swiftly down the street. (தெருவோடு)
6. I came, I saw, I conquered.
7. I shall run home and tell my mother.
8. The watchman saw the thief and ran after him.
9. My son bought this book and gave it to me.
10. The boys caught many fish and sold them.

Lesson XXV.

The Infinitive

Just as there are two ways of forming the present tense in Tamil, (a) with க்கிற and (b) with கிற as medials, (See Lesson IV), so there are two ways of forming the Infinitive.

I. Verbs which form the present tense with the medial க்கிற form the infinitive in க்க.

e.g.	பார்க்கிறேன்	I see.	பார்க்க to see.
	இருக்கிறேன்	I am.	இருக்க to be.

Exercise XXV A.

Similarly write the 1st person singular, present tense, and the infinitive of the following verbs.

கொடு; வை, அடி, பிடி, படி, நேசி, வாசி, நட, திற, கட

II. Verbs which end in உ and form their present tense in கிற form the infinitive by dropping the உ of the imperative.

Thus:	Imperative	Present	Infinitive
	காட்டு	காட்டுகிறேன்	காட்ட to show
	தூங்கு	தூங்குகிறேன்	தூங்க to sleep.

Exercise XXV B.

Similarly write out the present tense, 1st person, singular and infinitive of ஓடு, தொடு, எழுது, உட்காரு, கூப்பிடு, வாங்கு.

III. The following verbs form their infinitive irregularly.

Imperative	Present Tense	Infinitive
கேள்	கேட்கிறேன்	கேட்க to hear
நில்	நிற்கிறேன்	நிற்க to stand
கல்	கற்கிறேன்	கற்க to learn
வா	வருகிறேன்	வர to come
தா	தருகிறேன்	தர to give
செய்	செய்கிறேன்	செய்ய to make, do
ஆ or ஆகு	ஆகிறேன்	ஆக to become
சா	சாகிறேன்	சாக to die
போ	போகிறேன்	போக to go
நோ	நோகிறேன்	நோக to ache
வே	வேகிறேன்	வேக to burn
உண்	உண்கிறேன்	உண்ண to eat
தின்	தின்கிறேன்	தின்ன to eat
என்	என்கிறேன்	என்ன or என to say

To translate must *or* ought வேண்டும் is used with the infinitive.

e.g. You ought to read it நீ அதை வாசிக்கவேண்டும்.
We must run home நாம் வீட்டுக்கு ஓடவேண்டும்.

Exercise XXV C.

Translate into English:

1. நீ அந்த நாற்காலியின்மேல் நிற்கவேண்டும்.
2. பிள்ளைகள் வைத்தியனைப் பார்க்க வீட்டுக்குப் போனார்கள்.
3. நாம் எல்லாரும் சாகவேண்டும்.
4. நான் இதை உனக்குச் சொல்ல வந்தேன்.
5. நீங்கள் நாளைக்கு இந்தப் புஸ்தகத்தை வாசிக்க வேண்டும்.

Exercise XXV D.

Translate into Tamil:

1. He came to see me yesterday.
2. She came here to show me the room.
3. We must cross that wide river.
4. You must sleep in my room.
5. The stag came to drink the water.
6. Children, you must love your mother.

Lesson XXVI.

Rules of Combination III

We have already learned (Book II, Lessons II and VIII) that when a word beginning with one of the consonants க், ச், த், ப் follows (a) a word in the Accusative, (b) a word in the Dative, (c) இந்த, அந்த, எந்த the consonant is doubled. The same rule applies to words beginning with க், ச், த் or ப் if they follow an infinitive.

e.g. He went to open the door.
அவன் கதவை த் திறக்க ப் போனுன்.

Give him water to drink.
அவனுக்கு க் குடிக்க த் தண்ணீர் கொடு.

Exercise XXVI A.

Translate into English:

பாட்டு = song.
வாழை = plantain.

1. பையன் இங்கே பாட்டைக் கேட்க வந்தான்.
2. நீ எப்போது அந்தப் பாடத்தைக் கற்கப் போகிறாய்?
3. நான் அவனை நாற்காலியின்மேல் நிற்கச் செய்தேன்.
4. என் வேலைக்காரன் வண்ணானை வரச்சொன்னான்.
5. நான் நாலு வாழைப்பழங்களை உண்ணப்போகிறேன்.
6. நீ அந்தத் துணியை எனக்குத் தரப்போகிறாயா?
7. நான் தட்டானை அந்தப் பொன் மோதிரத்தைச் செய்யச் சொன்னேன்.

Exercise XXVI B.

Translate into Tamil:

1. He went to give my brother this book.
2. Tell him to run home now.
3. The woman gave my sister milk to drink.
4. Whom did you go to see?
5. My brother went to the shop to buy a hat.
6. Tell him to put it on the table.
7. My father told me to open this window.
8. The boy saw the cat eat the bird.
9. We ought to go home quickly.
10. You must go to that shop to buy oil.

Lesson XXVII.

The Affix உம்

And is expressed by adding உம், which is attached to each of the words to be joined.

e. g. பாலும் தேனும் = Milk and honey.

என் சகோதரனும் சகோதரியும் இங்கே வந்தார்கள்.

My brother and sister came here.

சிங்கத்தையும் புலியையும் காட்டில் பார்த்தேன்.

I saw a lion and a tiger in the forest.

வீட்டையும் தோட்டத்தையும் கிணற்றையும் வாங்கினான்.

He bought the house, the garden *and* the well.

N. B. Sometimes all the words are put in the nominative case except the last, which then takes the case ending in the plural and உம்.

So வீடு, தோட்டம் கிணறுகளையும் வாங்கினான்.

When the affix உம் is added to a single word it has the meaning of also *or* even.

அவனும் அதைப் பார்த்தான். *Even* he saw it, *or* He *also* saw it.

Exercise XXVII A.

Translate into English:

எருது = an ox.

1. என் தகப்பனாரும் தாயாரும் கோவிலுக்குப் போனார்கள்.
2. பையன் பூனையையும் நாயையும் தோட்டத்தில் பார்த்தான்.
3. அந்தப் பூக்களையும் பழங்களையும் எனக்குக் கொடு.
4. அரசன் நாலு வீடுகளையும் இரண்டு தோட்டங்களையும் ஐந்து கிணறுகளையும் வாங்கினான்.
5. அந்த ஊரில் பல தெருக்களும் பெரிய வீடுகளும் இருக்கின்றன.
6. மான்களும் குதிரைகளும் வயலில் வேகமாக ஓடின.
7. எருதுகளும் பசுக்களும் ஆற்றைக் கடந்தன.
8. மேசையும் புதியது.

Exercise XXVII B.

Translate into Tamil:

1. Show him your head, your face, your ears, your eyes and your nose.
2. My father gave me five books and six pictures; your father also gave you a book.
3. Men and women must die.
4. The gardener came to the village and bought many trees and bushes.
5. The king gave me several houses and gardens.
6. Even your sister saw it.
7. My mother bought vegetables and fruits at that shop.

Lesson XXVIII

The Relative Participle

There are no relative pronouns in Tamil, but where in English we use a relative pronoun, in Tamil we use a part of the verb called the relative participle.

There are three relative participles; the present, the past and future.

The *present relative participle* is formed from the 3rd person neuter, singular of the present tense by dropping the final து.

Thus from

கொடுக்கிறது	we get	கொடுக்கிற
இருக்கிறது	,,	இருக்கிற
எழுதுகிறது	,,	எழுதுகிற
செய்கிறது	,,	செய்கிற
வருகிறது	,,	வருகிற

Exercise XXVIII A.

What is the present relative participle of the following verbs.

• வாசி, பார், உட்காரு, பிடி, திற, தூங்கு, ஓடு, போ, நேசி, காட்டு.

Use of the Relative Participle.

1. The relative participle is always immediately followed by the word which, in the corresponding English sentence is the antecedent to the relative pronoun.

e. g., எழுதுகிற பையன் இங்கே இருக்கிறான்.
The boy *who is writing* is here.

நாளைக்கு வருகிற மனிதன் இவன்தான்.
This is the man *who is coming* tomorrow.

2. Relative participles being parts of verbs can take an object. This object must precede the participle.

e. g. கடிதத்தை எழுதுகிற பையன் இங்கே இருக்கிறான்.
The boy *who is writing a letter* is here.

அவன் அந்த பாம்பைப் பார்க்கிற மனிதன்.
He is the man who is looking at that snake.

Relative pronouns are indeclinable, and will not vary whatever may be the gender, number or person of their subject.

<table>
<tr><td rowspan="4">e. g. அறையில் இருக்கிற</td><td>மனிதன்</td></tr>
<tr><td>பெண்</td></tr>
<tr><td>மனிதர்கள்</td></tr>
<tr><td>நாய்கள்</td></tr>
</table>

<table>
<tr><td>The man</td><td rowspan="4">who (or which)</td><td rowspan="2">is</td><td rowspan="4">in the room.</td></tr>
<tr><td>The girl</td></tr>
<tr><td>The man</td><td rowspan="2">are</td></tr>
<tr><td>The dog</td></tr>
</table>

Exercise XXVIII B.

Translate into English:

1. உன் அறையில் இருக்கிற பையன் யார்?
2. அவன் வாசிக்கிற புஸ்தகத்தை எனக்குக் கொடு.
3. தோட்டத்தில் இருக்கிற மனிதன் ஒரு பாம்பைப் பார்க்கிறான்.
4. நான் அந்தத் தெருவில் இருக்கிற வீட்டுக்குப் போகிறேன்.
5. இன்றைக்கு வருகிற மனிதன் அவனா?
6. பெட்டியைச் செய்கிற மனிதன் தச்சன்.
7. என் பெட்டியைத் திறக்கிற சாவி இதுதான்.

Exercise XXVIII C.

Translate into Tamil:

1. The people who are coming here.
2. The carpenter who is making a chair.
3. The girl who is in the room.
4. The woman who is in the shop.
5. The farmer who is in the field.
6. The boy who is reading my book.
7. The dog which is biting the man.
8. The cat which is drinking the milk.
9. This is the book which I am reading.
10. This is the book which you are reading.
11. This is the book which the boy is reading.
12. This is the book which the girls are reading.
13. Show me the table which the carpenter is making.
14. The girl who is looking at that picture is my sister.
15. I came from the shop which is in the village.

Lesson XXIX.

The Past Relative Participle

The *Past Relative Participle* is formed from the 3rd person, neuter, singular of the past tense by dropping the final து.

Thus from

கொடுத்தது	we get	கொடுத்த
வந்தது	,,	வந்த
செய்தது	,,	செய்த
எழுதினது	,,	எழுதின

உன் அறையில் இருந்த பையன் யார்?
Who is the boy *who was* in your room.

மனிதனைக் கடித்த குதிரை எங்கே?
Where is the horse *which bit* the man?

Exercise XXIX A.

Write out the past relative participle of the following verbs:—

விளையாடு, பிடி, ஓடு, பார், திற, அனுப்பு, போ, தூங்கு, உட்காரு, குடி.

Exercise XXIX B.

Translate into English:

1. நேற்று அவன் வாசித்த புஸ்தகத்தை எனக்குக் கொடு.
2. அந்தப் பெட்டியைச் செய்த மனிதன் தச்சன்.
3. தோட்டத்தில் இருந்த ஆள் ஒரு பாம்பைப் பார்த்தான்.
4. நேற்று வந்த மனிதன் அவனா?
5. அது நீ பார்த்த நாய்.
6. பாலைக்குடித்த பூனையை எனக்குக் காட்டு.
7. தச்சன் செய்த நாற்காலியை எனக்குக் கொடு.

Exercise XXIX C.

Translate into Tamil:

1. Where is the boy who ran home?
2. Give it to the woman who went to the shop.
3. This is the book which I read yesterday.
4. This is the book she read yesterday.
5. Where is the fish which you caught?
6. Where is the fish which they caught?
7. This is the man whom we saw in the house.
8. This is the man whom he saw in the house.
9. Give me the box which my father bought.
10. You must sleep in the room which I showed to you.

Lesson XXX.

Future Relative Participle

The *Future Relative Participle* is the same as the 3rd person, neuter, singular of the future tense.

e.g. எழுதும், கொடுக்கும், வரும், இருக்கும்.

நாளைக்கு வரும் வேலைக்காரனை எனக்கு அனுப்பு.

Send me the servant who *will come* tomorrow.

என் பெட்டியைத் திறக்கும் ஒரு சாவியை எனக்குக் கொடு.

Give me a key which will open my box.

Exercise XXX A.

Write out the Future Relative Participle of

செய், நட, போ, கூப்பிடு, அடி, வாங்கு, படி, காட்டு, வை, கேள்.

Exercise XXX B.

Translate into English:

1. அந்த வேலையை செய்யும் ஆளை இங்கே வரச்சொல்லு.
2. ஊருக்குப் போகும் மனிதன் யார்?
3. என்னைக் கூப்பிடும் தச்சன் அவனா?
4. பிள்ளைகளை அடிக்கும் பையன் என் சகோதரன்.
5. கடையில் துணியை வாங்கும் வேலைக்காரன் இங்கே வந்தானா?
6. நன்றாய்ப் படிக்கும் பெண் இந்த வகுப்பில் இருக்கிறாளா?
7. வழிக்காட்டும் மனிதனை இங்கே கூப்பிடு.

Exercise XXX C.

Translate into Tamil:

1. This is the book which I shall read tomorrow.
2. This is the book which you will read tomorrow.
3. Is he the man who will come tomorrow?
4. Give me a key which will open my door.
5. Who is the boy who will go to my shop.
6. This is a dog which will bite you.
7. This is a cat which will drink water.
8. My brother and sister are children who will play with you.
9. You must buy a horse which will run fast.
10. Go to the church which you will see in that large town.

Lesson XXXI.

Adverbs

I. Some words are by nature adverbs e. g. இனி henceforth, பின்பு afterwards, முன்பு beforehand, இங்கே here, அங்கே there, இப்படி in this way, so, அப்படி in that way, so, மாத்திரம் only, கொஞ்சம் or கொஞ்சமாய் a little.

II. Adverbs are formed from nouns by affixing ஆய் or ஆக e.g.

வேகம்	speed	வேகமாய்	swiftly
சந்தோஷம்	joy	சந்தோஷமாய்	gladly
கோபம்	anger	கோபமாய்	angrily
அன்பு	love	அன்பாய்	lovingly

Similarly

சீக்கிரமாய்	soon	மெதுவாய்	softly
பத்திரமாய்	carefully	நன்றாய்	well
புத்தியாய்	wisely	இரக்கமாய்	mercifully
நியாயமாய்	justly	அநியாயமாய்	unjustly
தெளிவாய்	clearly	சத்தமாய்	loudly

III. Some infinitive moods are also used as adverbs e.g.

கூட together, வலிய freely, spontaneously, சூழ round about, கிட்ட near, ஒழிய besides, மெல்ல slowly, வரவர gradually.

Rules of Combination IV.

(See Lessons XXI and XXVI)

After a word ending in the adverbial affix ஆய் or ஆக, when the next word begins with க ச த or ப, the consonant க், ச், த் or ப் is inserted.

e.g. அதை நன்றாய்ச் செய்தான்.
He did it well.
எனக்காகப் போனான்.
He went on my behalf.

Exercise XXXI A.

பேசு = speak திட்டு = abuse, scold
உபதேசி = teacher

Translate into English:

1. பெண்கள் சந்தோஷமாய் வீட்டுக்கு ஓடினார்கள்.
2. நியாயாதிபதி இரக்கமாய்ப் பேசினார்.
3. வண்டிக்காரன் வண்ணானை அநியாயமாய்த் திட்டினார்.
4. உபதேசியார் தெளிவாகப் பேசினார். நாங்கள் நன்றாய்க் கேட்டோம்.
5. இன்றைக்கு நீ கொஞ்சமாய்த் தூங்கவேண்டும்.
6. என் சகோதரன் பள்ளிக்கூடத்துக்கு வேகமாய் ஓடினான்.
7. பிள்ளைகளே, மெல்ல நடந்துபோங்கள்.

Exercise XXXI B.

Translate into Tamil:

1. He is a wise king.
2. He spoke wisely always.
3. She is a beautiful girl.
4. The girl reads beautifully.
5. The boy ran swiftly home from school.
6. My brother and sister both came home together.
7. He walked slowly to the garden.
8. Come to church with me. Afterwards you will see your brother.
9. You will soon read this book.
10. The little girl reads books a little only.

Lesson XXXII.

போது, பின், முன் with the relative participle

Subordinate clauses of time beginning with *when* or *whilst* are expressed in Tamil by போது or பொழுது affixed to the relative participle. The present, past or future relative participle may be used according to the sense.

e.g. When I come home, I will do it.
நான் வீட்டுக்கு வரும்போது அதைச் செய்வேன்.

When I came home I did it.
நான் வீட்டுக்கு வந்தபோது அதைச் செய்தேன்.

While I am coming home I do it.
நான் வீட்டுக்கு வருகிறபோது அதைச் செய்கிறேன்.

Exercise XXXII A.

Translate into English :

1. மனிதன் பாம்பைப் பார்த்தபோது வீட்டுக்கு ஓடினான்.
2. நான் தூங்குகிறபோது என் தகப்பனார் வயல்களுக்குப் போகிறார்.
3. நீங்கள் கப்பலைப் பார்க்கும்போது என்னிடத்தில் வந்து சொல்லுங்கள்.
4. மனிதன் அறையில் இருந்தபோது திருடன் பணத்தைத் திருடினான்.
5. நீ என் வீட்டுக்கு வருகிறபோது அந்தப் புஸ்தகங்களை உனக்குக் கொடுப்பேன்.
6. பையன் ஒரு கடிதத்தை எழுதுகிறபோது அவனுடைய சகோதரி அவனைப் பார்க்க வருகிறாள்.
7. நீங்கள் காட்டில் இருந்தபோது எத்தனை சிங்கங்களைப் பார்த்தீர்கள்?

Exercise XXXII B.

Translate into Tamil:

1. When the hunter caught the stag, what did you do?
2. While you are watching the carpenter, he will make a box.
3. When you are coming from the garden bring me four red flowers.
4. When your mother comes give her these clothes.
5. When you went to church did you see my sister there?
6. When my brother went to the shop which is in that village, he bought clothes and a new hat.
7. When the bird came down from the tree, the fox seized it and bit it.

II. Subordinate clauses of time beginning with *after* are expressed in Tamil by adding பின் (or பின்னே, பின்பு or பிறகு) to the *past* relative participle.

e.g. After he had gone, I went home.
அவன் போனபின் நான் வீட்டுக்குப் போனேன்.

III. Subordinate clauses of time beginning with *before* are expressed in Tamil by adding முன் or முன்னே or முன்பு to the *future* relative participle.

e.g. Before he came, I bought that book.
அவன் வருமுன் நான் அந்தப் புஸ்தகத்தை வாங்கினேன்.

Exercise XXXII C.

Translate into English:

1. நீங்கள் அந்தப் புஸ்தகத்தை வாசித்த பிறகு எனக்கு அதைக் கொடுங்கள்.
2. அவன் கதவைத் திறந்தபின்னே திருடன் ஓடிப் போனான்.
3. என் சகோதரி கடைக்குப் போனபின்பு என் சகோதரன் வீட்டுக்கு வந்தான்.
4. நீங்கள் அறையில் வருமுன் நான் கடிதத்தை வாசித்தேன்.
5. மனிதன் பாம்பைப் பார்க்குமுன்னே அது நாயைக் கடித்தது.
6. நீ பள்ளிக்கூடத்துக்குப் போகுமுன் நான் உன்னைப் பார்த்தேன்.
7. நீ பள்ளிக்கூடத்துக்குப் போகுமுன் கடைக்குப் போ.

Exercise XXXII D.

Translate into Tamil:

1. After my father came home, I went to the shop.
2. After you have given him the money, come to my room.
3. After the hunter had seen the tiger, a horse ran into the forest.
4. Before the cat had drunk the milk, the dog came into the room.
5. Before you write your letter, come with me to the garden.
6. Before I open the door, show me your key.
7. Before my mother came, I opened my box.
8. After my mother came, I opened my box.

Exercise XXXII E.

Translate into Tamil:

1. When the boy saw his father, he ran to his room.
2. After the boy saw his father, he ran to his room.
3. Before the boy saw his father, he ran to his room.
4. After the driver had shown him the house, he went to the village.
5. Before your mother comes, go to the garden and bring a few flowers to me.
6. Go to my room afterwards.
7. Go to my room after the lesson.
8. Go to my room after you have read this book.
9. He saw it beforehand.
10. He saw it in front of the tree.
11. Before you came here, he saw it.

Lesson XXXIII.

Numerals

(See Lessons XX and XXIII)

I. Combinations of tens and units are formed by adding the unit to the adjectival form of the ten.

e.g. இருபத்து is the adjectival form of இருபது.
முப்பத்து ,, ,, ,, ,, ,, முப்பது.
நாற்பத்து ,, ,, ,, ,, ,, நாற்பது.
etc.

Therefore

21 = இருபத்து + ஒன்று = இருபத்தொன்று.
22 = ,, + இரண்டு = இருபத்திரண்டு.
33 = முப்பத்து + மூன்று = முப்பத்து மூன்று.

etc.

Exercise XXXIII A.

Form similarly to the above

(1) 24, 25, 26, 27, 28, 29.
(2) 31, 32, 35, 36, 39.
(3) 42, 53, 64, 75, 86.

II. The adjectival form of நூறு is நூற்று and that of ஆயிரம் is ஆயிரத்து

Therefore 101 is நூற்றொன்று.
1001 is ஆயிரத்தொன்று.
120 is நூற்றிருபது.

Exercise XXXIII B.

Write in Tamil: 102, 1002, 130, 1020, 1300, 137, 163, 475, 649, 1435.

Exercise XXXIII C.

Translate into Tamil:

1. There are three hundred and sixty-five days in a year.
2. I went to that town in the year 1869.
3. The merchant sold 154 eggs in one week.
4. We counted 276 houses in that town.
5. The farmer sold 27 cows on Tuesday.
6. I put 35 books in your box yesterday.
7. My father spent Rs. 1,432 at one shop.

Lesson XXXIV.

Prepositional affixes III.

போல், தவிர, சூழ, சுற்றி.

In lesson IX, we learned three prepositional affixes மேல், ஓடு and கிட்ட which were added to the *inflectional base.*

In lesson XXII, we learned three others முன், பின் and கீழ் which were added to the *dative case.*

We must now learn others which are added to the *accusative case.*

They are

போல் or போல	meaning	like.
தவிர	,,	except.
சூழ or சுற்றி	,,	round about.

e.g. He is like you.
அவன் உன்னைப்போல் இருக்கிறான்.
They all came except me.
என்னைத்தவிர அவர்கள் எல்லாரும் வந்தார்கள்.
There are many clouds round the sun.
சூரியனைச் { சூழ / சுற்றி } அநேக மேகங்கள் இருக்கின்றன.

Exercise XXXIV A.

தன் (Reflexive pronoun) = his, her or its.
கட்டு = to tie or bind.

Translate into English :

1. இந்தப் பையன் தன் தகப்பனைப்போல் இருக்கிறான்.
2. என் சகோதரனைத்தவிர நாங்கள் எல்லாரும் இங்கே இருக்கிறோம்.
3. என் கையைச்சுற்றி ஒரு துணியைக் கட்டினேன்.
4. இந்தப் புஸ்தகம் இந்தப் பூவைப்போல சிவப்பாய் இருக்கிறது.
5. சிங்கத்தைத்தவிர மிருகங்களை எல்லாம் நான் பார்த்தேன்.
6. இரண்டு மரங்களையும் சுற்றி கயிற்றைக் கட்டு.
7. என் சகோதரியைத் தவிர நாங்கள் எல்லாரும் பிள்ளைகளைப்போல எங்களுடைய தாயைச்சுற்றி ஒடினோம்.

Exercise XXXIV B.

Translate into Tamil :

1. Are you like your mother?
2. All are reading the book except you.
3. We went round the village yesterday.
4. Look for a box like this near the house.
5. Except the lion all the animals are in this jungle.
6. The people came round us like flies.
7. Along with you, I looked for your hat in the house, under the bed, in front of the table, near the chair, on the box and around the room behind the door.

VOCABULARY

Tamil–English

அகலம்	breadth.
அடி	hit.
அணில்	squirrel.
அதோ	over there.
அநியாயமாய்	unjustly.
அநேக	many.
அரசன்	a king.
அல்லது	or.
அழகு	beauty.
அறை	a room.
அன்பு	love.
ஆ	become.
ஆடு	a goat.
ஆடு	dance.
ஆறு	a river.
ஆள்	a man.
இடம்	a place.
இப்போது	now.
இரக்கம்	mercy.
இராஜன்	a king.
இரு	be.
இன்றைக்கு	today.
இனாம்	a present.
ஈ	a fly.
உடன்	with.
உடுப்பு	clothes.
உட்காரு	sit.
உண்டு	there is, there are.
உபதேசி	a teacher.
உயரம்	height.
ஊர்	a village.
எங்கே	where.
எடு	take, pick up.
எண்ணு	count.
எண்ணெய்	oil.
எத்தனை	how many.
எப்போது	when.
எருது	an ox.
எல்லாம்	all.
எல்லாரும்	all (people).
எலி	a rat.
எழுது	write.
ஏழை	poor.
ஏன்	why.
ஒழிய	except.
ஓடு	together with.
ஓடு	run.

ஓட்டு	drive.
கட	cross (a river).
கடல்	the sea.
கட்டடம்	a building.
கடி	bite.
கடிதம்	a letter.
கடை	a shop.
கண்	the eye.
கதவு	a door.
கதை	a story.
கத்தி	a knife.
கப்பல்	a ship.
கயிறு	a rope, string.
கரடி	a bear.
கல்	a stone.
கழுதை	a donkey, an ass.
கன்று	a calf.
காகம்	a crow.
காடு	a forest.
காட்டு	show.
காது	an ear.
காப்பு	a bangle.
காய்	a vegetable
காலை	morning.
காவற்காரன்	watchman.
கிட்ட	near.
கிணறு	a well.
கீழ்	under.
குடி	drink.
குடியானவன்	a farmer.
குட்டி	lamb, kitten.
குதிரை	a horse.
குழந்தை	a child.
கூட	together.
கூப்பிடு	call.
கேள்	hear.
கை	a hand.
கொஞ்சம்	a little.
கொடு	give.
கொண்டுவா	bring.
கொண்டுபோ	take.
கோபம்	anger.
கோவில்	church.
சகோதரன்	a brother.
சகோதரி	a sister.
சண்டை	a battle.
சந்தோஷம்	joy.
சமீபத்தில்	near.
சனி	Saturday.
சா	die.
சாவி	a key.
சிங்கம்	a lion.
சிவப்பு	redness.
சிறிய	small.
சீக்கிரத்தில்	soon.
சுற்றி	around.

சூரியன்	the sun.
சூழ	around.
செடி	a bush.
செய்	make, do.
செய்தி	news, events.
செலவு செய்	spend.
செவ்வாய்	Tuesday.
சொல்லு	say.
ஜனங்கள்	people.
ஜெயி	conquer.
ஸ்திரீ	a woman.
ஞாயிறு	Sunday.
ஞானி	a wise man.
தகப்பன்	a father.
தச்சன்	a carpenter.
தடி	a stick.
தட்டான்	a goldsmith
தண்ணீர்	water.
தம்பி	younger brother.
தலை	head.
தவிர	except.
தன்	his or her.
தாய்	a mother.
திங்கள்	Monday.
திட்டு	abuse, scold
திருடன்	a thief.
திற	open.
துறைமுகம்	a harbour.
துணி	cloth.
தூங்கு	sleep.
தெருவு	a street.
தெளிவாக	clearly.
தேசம்	country.
தேன்	honey.
தொடு	touch.
தொப்பி	hat.
தோட்டம்	a garden.
தோட்டக்காரன்	a gardener.
நட	walk.
நரி	a fox.
நல்ல	good.
நன்றாய்	*adv.* well.
நாக்கு	the tongue.
நாய்	a dog.
நாள்	a day.
நாளைக்கு	tomorrow.
நாற்காலி	a chair.
நியாயம்	justice.
நியாயாதிபதி	a judge.
நில்	stand.
நிழல்	a shadow.
நீதி	justice.
நீளம்	length.
நேசி	love.
நேற்று	yesterday.
பசு	a cow.
பச்சை	greenness.
படம்	a picture.

பட்சி	a bird.
பட்டணம்	a town.
படுக்கை	a bed.
பணம்	money.
பத்திரமாய்	carefully.
பதில்	a reply.
பல்	a tooth.
பல	several.
பலம்	strength.
பள்ளிக்கூடம்	school.
பழம்	fruit.
பாடம்	a lesson.
பாட்டு	a song.
பாம்பு	a snake.
பாய்	a mat.
பார்	look, see.
பால்	milk.
பாலம்	a bridge.
பானை	a pot.
பிடி	seize.
பிள்ளை	child, girl.
பிறகு	afterwards.
பின்	after.
புதன்	Wednesday.
புத்தி	wisdom.
புதிய	new.
புஸ்தகம்	a book.
புல்	grass.
புலி	a tiger.
பூ	a flower.
பூனை	a cat.
பெட்டி	a box.
பெண்	a woman, girl.
பெரிய	large.
பேசு	speak.
பையன்	a boy.
பொன்	gold.
போ	go.
போது	when.
போல	like.
மகள்	daughter.
மரம்	a tree.
மனிதன்	a man.
மாடு	an ox.
மாத்திரம்	only.
மாமன்	uncle.
மாலை	evening.
மான்	a stag.
மிருகம்	an animal.
மீன்	a fish.
முகம்	face.
முட்டை	an egg.
முள்	a thorn.
முன்	before *or* in front of.
மெதுவு	slowness.
மெல்ல	slowly.
மேகம்	a cloud.
மேசை	a table.

மேல்	on *or* upon.
மோதிரம்	a ring.
யார்	who.
ரூபாய்	a rupee.
வகுப்பு	a class.
வண்ணான்	a dhoby.
வண்டி	a cart.
வண்டிக்காரன்	a driver.
வயிறு	thestomach
வயல்	a field.
வருஷம்	a year.
வா	come.
வாங்கு	buy.
வாசி	read.
வாரம்	a week.
வால்	a tail.
வாழை	a plantain.
வியாபாரி	a merchant.
வியாழன்	Thursday.
விளையாடு	play.
வீடு	a house
வீதி	a street.
வீரன்	a soldier.
வெளியே	outside.
வெள்ளி	Friday.
வெள்ளை	white.
வேகமாய்	swiftly.
வேடன்	a hunter.
வேண்டும்	ought, must.
வேலை	work.
வை	put.
வைத்தியன்	a doctor.

VOCABULARY.

English–Tamil.

abuse	திட்டு.
after	பின்.
afterwards	பிறகு.
all	எல்லாம்.
anger	கோபம்.
animal	மிருகம்.
around	சூழ, சுற்றி.
bangle	காப்பு.
battle	சண்டை.
be	இரு.
bear	கரடி.
beauty	அழகு.
become	ஆ.
bed	படுக்கை.
before	முன்.
bird	பட்சி.
bite	கடி.
book	புஸ்தகம்.
boy	பையன்.
breadth	அகலம்.
bridge	பாலம்.
bring	கொண்டு வா.
brother	சகோதரன்.
building	கட்டடம்.
bush	செடி.
buy	வாங்கு.
calf	கன்று.
call	கூப்பிடு.
carefully	பத்திரமாய்.
carpenter	தச்சன்.
cart	வண்டி.
cat	பூனை.
chair	நாற்காலி.
child	பிள்ளை, குழந்தை.
church	கோவில்.
class	வகுப்பு.
clearly	தெளிவாக.
cloth	துணி.
clothes	உடுப்புகள்.
cloud	மேகம்.
come	வா.
conquer	ஜெயி.
count	எண்ணு.
country	தேசம்.
cow	பசு.
cross	கட.
crow	காகம்.
dance	ஆடு.
daughter	மகள்.
day	நாள்.

dhoby	வண்ணான்.
die	சா.
do	செய்.
doctor	வைத்தியன்.
dog	நாய்.
donkey	கழுதை.
door	கதவு.
drink	குடி.
drive	ஓட்டு.
driver	வண்டிக்காரன்.
ear	காது.
egg	முட்டை.
evening	மாலை.
except	தவிர, ஒழிய.
eye	கண்.
face	முகம்.
farmer	குடியானவன்.
father	தகப்பன்.
few	சில.
field	வயல்.
fish	மீன்.
flower	பூ.
fly	ஈ.
forest	காடு.
fox	நரி.
Friday	வெள்ளி.
fruit	பழம்.
garden	தோட்டம்.
gardener	தோட்டக்காரன்.
girl	பெண்.
give	கொடு.
go	போ.
goat	ஆடு.
gold	பொன்.
goldsmith	தட்டான்.
good	நல்ல.
grass	புல்.
greenness	பச்சை.
hand	கை.
harbour	துறைமுகம்.
hat	தொப்பி.
head	தலை.
height	உயரம்.
hear	கேள்.
hit	அடி.
honey	தேன்.
horse	குதிரை.
house	வீடு.
how many	எத்தனை.
hunter	வேடன்.
joy	சந்தோஷம்.
judge	நியாயாதிபதி.
justice	நியாயம், நீதி.
key	சாவி.
king	அரசன், இராஜா.
kitten	குட்டி.
knife	கத்தி.
large	பெரிய.
length	நீளம்.
lesson	பாடம்.

letter	கடிதம்.
like	போல.
lion	சிங்கம்.
little *adv.*	கொஞ்சம்.
look	பார்.
love *noun*	அன்பு.
,, *verb*	நேசி.
make	செய்.
man	மனிதன், ஆள்.
many	அநேக.
mat	பாய்.
merchant	வியாபாரி.
mercy	இரக்கம்.
milk	பால்.
Monday	திங்கள்.
money	பணம்.
morning	காலை.
mother	தாய்.
must	வேண்டும்.
near	கிட்ட, சமீபத்தில்
new	புதிய.
news	செய்தி.
now	இப்பொழுது.
oil	எண்ணெய்.
on	மேல்.
only	மாத்திரம்.
open	திற.
or	அல்லது.
ought	வேண்டும்.
outside	வெளியே.
over there	அதோ.
ox	மாடு, எருது.
people	ஜனங்கள்.
picture	படம்.
pick up	எடு.
place	இடம்.
plantain	வாழை.
play	விளையாடு.
poor	ஏழை.
pot	பானை.
present	இனாம்.
put	வை.
rat	எலி.
read	வாசி.
redness	சிவப்பு.
reply	பதில்.
ring	மோதிரம்.
river	ஆறு.
room	அறை.
rope	கயிறு.
round *prep.*	சூழ், சுற்று.
run	ஓடு.
rupee	ரூபாய்.
Saturday	சனி.
say	சொல்லு.
school	பள்ளிக்கூடம்.
scold	திட்டு.
sea	கடல்.
see	பார்.
seize	பிடி.

several	பல.
shadow	நிழல்.
ship	கப்பல்.
shop	கடை.
show	காட்டு.
sister	சகோதரி.
sit	உட்காரு.
sleep	தூங்கு.
slowly	மெல்ல.
slowness	மெதுவு.
small *adv.*	கொஞ்சம்.
snake	பாம்பு.
soldier	வீரன்.
song	பாட்டு.
soon	சீக்கிரத்தில்.
speak	பேசு.
spend	செலவு செய்.
squirrel	அணில்.
stag	மான்.
stand	நில்.
stick	தடி.
stomach	வயிறு.
stone	கல்.
story	கதை.
street	வீதி, தெருவு.
strength	பலம்.
string	கயிறு.
sun	சூரியன்.
Sunday	ஞாயிறு.
swiftly	வேகமாய்.
table	மேசை.
tail	வால்.
take up	எடு.
take away	கொண்டு போ.
teacher	உபதேசி.
there is *or* are	உண்டு.
thief	திருடன்.
thorn	முள்.
Thursday	வியாழன்.
tiger	புலி.
today	இன்றைக்கு, இன்று.
together	கூட.
tomorrow	நாளைக்கு.
tongue	நாக்கு.
tooth	பல்.
touch	தொடு.
town	பட்டணம்.
tree	மரம்.
Tuesday	செவ்வாய்.
uncle	மாமன்.
under	கீழ்.
unjustly	அநியாயமாய்
upon	மேல்.
vegetable	காய்.
village	ஊர்.
watchman	காவற்காரன்.
water	தண்ணீர்.
Wednesday	புதன்.

week	வாரம்.	wisdom	புத்தி.
well *nou.*	கிணறு.	wise man	ஞானி.
adv.	நன்றாய்.	with	ஓடு, உடன்.
when	போது, எப்போது.	woman	பெண், ஸ்திரீ.
where	எங்கே.	work	வேலை.
white	வெள்ளை.	write	எழுது.
who	யார்.	year	வருஷம்.
why	ஏன்.	yesterday	நேற்று.

175840

TB 031,6(8?) N32

DIOCESAN PRESS, MADRAS—1932. B 5336.

২৫২/109